# மோதலின் கடந்தகால அனுபவங்களை எதிர்கொள்ளுதல்

**மோதலுக்குப் பின்னான நீதி பற்றிய ஒரு ஆய்வு முயற்சி**

**பிரஷான் தளையசிங்கம்**

நவம்பர் 2007

செய்முறைக் கட்டுரைத் தொடர்கள் இலக்கம்: 12 - 2007

மோதலின் கடந்தகால அனுபவங்களை எதிர்கொள்ளுதல்

மோதலுக்குப் பின்னான நீதி பற்றிய ஒரு ஆய்வு முயற்சி

© வறுமை ஆராய்ச்சி நிலையம் 2007

முதலாவது பதிப்பு – 2007

ISBN: 978-955-1040-38-3

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியல்

தளையசிங்கம், பிரஷான்
மோதலின் கடந்தகால அனுபவங்களை எதிர்கொள்ளுதல்: மோதலுக்குப் பின்னான நீதி பற்றிய ஒரு ஆய்வு முயற்சி / பிரஷான் தளையசிங்கம், கொழும்பு; வறுமை ஆராய்ச்சி நிலையம், 2007. 22p.; 29 c.m
(செய்முறைக் கட்டுரைத் தொடர்கள் இலக்கம்: 12 - 2007)

ISBN: 978-955-1040-38-3 விலை ரூபா: 300

i) 303.6 டிடிசி 21 ii) தலைப்பு

1. முரண்பாடுகளும் தீர்வும்

அட்டை அமைப்பு: கருணாரட்ண & சன்ஸ் லிமிட்டெட்

பதிப்பு : கருணாரட்ண & சன்ஸ் லிமிட்டெட்
67, யுடிஎ கைத்தொழில் பேட்டை,
கட்டுவான வீதி,
ஹோமாகம,
இலங்கை.

வெளியீட்டு உரிமை: வறுமை ஆராய்ச்சி நிலையம்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பதிப்புக்கள் தற்பொழுது பின்வரும் வகைகளைக் கொண்டுள்ளன; ஆய்வுகள், திரட்டிய தொகுப்புக்கள், செய்முறைக் கட்டுரைகள் மற்றும் விளக்கக் கட்டுரைகள்.

**பிரஷான் தலையசிங்கம்** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் (CEPA) வறுமையும் மற்றும் மோதல் நிகழ்ச்சித்திட்டத்தில் சிரேஷ்ட தொழில்சார் உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார். அவர் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் (Sussex University) முதுமாணிப் பட்டத்தினை சர்வதேச உறவுகள் துறையில் பெற்றுள்ளார்.

வறுமை ஆராய்ச்சி நிலையம் ஒரு சுயாதீனமான தொழில்சார் சேவை வழங்கும் நிறுவனமாகப் பணியாற்றி வருகின்றது. இலங்கையில் வறுமை தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கூடுதலான விளக்கத்தினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தினை மையமாகக் கொண்டு செயற்படும் நிறுவனமாக வறுமை ஆராய்ச்சி நிலையம் விளங்குகின்றது. பிரயோக ஆராய்ச்சி, ஆலோசனை வழங்குதல், பயிற்சி மற்றும் உரையாடல் மற்றும் கருத்துப் பரிமாறல் ஆகிய நான்கு பகுதிகள் மீது கவனம் செலுத்தும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாட்டுச் சேவைகள், வறுமைக் குறைப்பினை இலக்காக வைத்துப் பணியாற்றி வரும் ஏனைய நிறுவனங்களுக்கும், தொழில்சார் வல்லுநர்களுக்கும் வழங்கப்படும்.

இவ்வாய்வு வறுமை மற்றும் மோதல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு செயற்பாடாகும். இது சர்வதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆதரவுடன் தொடங்கப்பட்டது. இத்திணைக்களம் பிரித்தானிய அரசாங்க நிறுவனமாக, அபிவிருத்தி மற்றும் வறுமைக்குறைப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளது. இத்திணைக்களம், அரசாங்கங்கள், சிவில் சமூகம், தனியார் துறை மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றது. இத்திணைக்களம் வறுமையின் அடிப்படைக் காரணங்களாக இருப்பவற்றை நீக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்றது. மேலும், இத்திணைக்களம் இயற்கைக் காரணங்களினால் மற்றும் மனிதச் செயல்களினால் விளைவிக்கப்படும் நெருக்கடி நிலைத் தேவைகளுக்கும் உதவுகின்றது.

## நன்றியுரை

இவ்வாய்வில் பல வழிகளில் பங்கு கொண்டவர்களுக்கு நான் நன்றி கூற வேண்டியது தேவையுள்ளது; அதனை மனமுவந்து செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மன்னாரில் சமாதானத்திற்கான வளங்கள் திட்டம் என்ற நிறுவத்தினர் சமூகங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தித் தந்துள்ளனர்; அதனூடாக, ஆய்வுப் பங்காளர்களாகக் களத்தில் இருந்தவர்களுடன் நுண்ணுணர்வு மிகுந்த விடயங்கள் பற்றி உரையாடல் நடாத்த முடிந்துள்ளது.

வெளிக்கள ஆய்வுக்காகப் பணியாற்றிய குழுவினர், மொஹமட் முனாஸ், காயத்ரி லொகுகே, சரஸ்வதி போல்ராஜ் மற்றும் லியோ றெஜினோல்ட் றெஜிஸ் ஆகியோர் நேர்காணல் நடாத்துவதிலும், இவ்வாய்வுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதிலும் பங்களிப்பினைச் செய்துள்ளனர்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் (CEPA) உள்ள அலுவலர்கள் இவ்வாய்வின் இறுதி விளைவினை ஒத்திசைவான விதத்திலும் மற்றும் வெளியிடத்தக்க முறையிலும் அமைத்துக் கொள்வதில் உதவியளித்துள்ளனர். மற்றும், ஆய்வில் பங்கெடுத்த சமூகங்கள் இதனை நிறைவேற்றுவதில் பெரும் பணியாற்றியுள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக, மோதலிலிருந்து மீட்புப் பெறுதல் குறித்து மக்கள், குடும்பத்தினர் மற்றும் சமூகங்கள் ஆகிய வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறான விதத்தில் விளங்கிக் கொள்கின்றனர் என்பதனை இவ்வாய்வு ஒப்புக் கொள்கின்றது; அதனைக் கூடுதலாக ஒப்புக் கொள்ளுமாறு மேலும் இவ்வாய்வு அழைப்பு விடுக்கின்றது. சமூகங்கள் தாம் விரும்புகின்ற மீட்பு முறைகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான ஒரு அறைகூவலாகவும் இது அமைகின்றது. இவ்வாய்வு, மனதைத் தொட்டுச் செல்லும் ஆழமான, தனிப்பட்ட விடயங்களைப் பகிர்ந்து கொண்டு ஆய்வுக்கு ஆதரவளித்த சமூகத்தவர்களுக்கு, ஒப்புக் கொள்ளுதல் மற்றும் மாற்றம் என்பவை தொடர்பான அழைப்பிற்கு உறுதிப்படுத்தலை வழங்கியதற்காக அர்ப்பணமாகச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## பொருளடக்கம்


**நிறைவேற்றுச் சுருக்கம்** 1

**1. அறிமுகமும் நியாயப்படுத்தலும்** 3
மன்னார் எதற்காகத் தெரிவுசெய்யப்பட்டது?

**2. ஆய்வின் பின்னணியமைப்பு** 4
நீதி பற்றிய வரைவிலக்கணங்கள் 4
சமாதானம் பற்றிய வரைவிலக்கணங்கள் 5
மனித பாதுகாப்பு 6
இணக்கப்பாடு பற்றிய வரைவிலக்கணங்கள் 6
முடிவுரை 7

**3. ஆய்வுக்கான சமூகங்கள்** 8

**4. ஆய்வின் அணுகுமுறை** 8

**5. மோதல்கள் தொடர்பான அனுபவங்கள்** 9
மோதல் அனுபவங்கள் - KRI 9
மோதல் அனுபவங்கள் - MSL 9
மோதல் அனுபவங்கள் - NNT 10

**6. நீதியும் மீட்பும்** 11
கீழ் மட்ட சமூக-பொருளாதார நிலை 12
நடுத்தர சமூக-பொருளாதார நிலை 14
உயர்ந்த சமூக-பொருளாதார நிலை 16
முதற்கட்ட முடிவுகள் 17

**7. பின்னணியமைப்பின் மீள்பார்வை** 18
நீதி பற்றிய வரைவிலக்கணங்கள் 18
சமாதானம் பற்றிய வரைவிலக்கணங்கள் 18
மனித பாதுகாப்பு 19

**8. கருத்தாடலை மேலும் முன்னெடுத்துச் செல்லுதல்** 21

**9. மோதலுக்குப் பின்னான நீதி பற்றிய எண்ணக்கருவின் மீள்பார்வை** 21

**Bibliography**

## நிறைவேற்றுச் சுருக்கம்

மோதலுக்குப் பின்னான நீதி என்பதை விளங்கிக் கொள்வது மற்றும் அது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியல் எத்தகைய அர்த்தத்தினைக் கொண்டுள்ளது என்பதைப் பற்றி அறிய முயலுவதாக இவ்வாய்வு அமைகின்றது. இதில், நீதி கிடைப்பது தொடர்பாக சமூக-பொருளாதார நிலையின் பங்களிப்பினையும், பெறுகின்ற நீதியின் வடிவத்தினையும் அது எந்த நேரத்தில் பெறப்படுவது என்பது நிர்ணயிக்கப்படுவது பற்றி நோக்குவதும் முக்கிய பணியாக இடம் பெறுகின்றது. இவ்வாய்வு குறிப்பாக மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எவ்வாறு தங்களுடைய அனுபவங்களிலிருந்து தம்மை மீட்டுக் கொள்கின்றனர், அவ்வாறான மீட்பில் நீதி கிடைத்தல் எத்தகைய பங்களிப்பினைச் செய்கின்றது என்பவை முக்கிய கவனத்துக்கு எடுத்துக் கொள்கின்றது.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக-பொருளாதார நிலைகள், அவர்கள் எவ்வாறான நீதியை எவ்வாறான கட்டத்தில் பெறுகின்றனர் என்பதில் செல்வாக்குச் செலுத்தும் என்பதே பிரதான கருதுகோளாகின்றது.

இந்த ஆய்வானது, நீதி கிடைத்தல் குறித்த வரைவிலக்கணத்தில் அதுவொரு முடிவுபெற்ற செயலாகக் கருதாமல், அது சமூகங்களையும் மற்றைய பங்காளர்களையும் பாதிக்கின்ற செயல்முறையாகக் கொள்வதுடன், அது தொடர்ந்தும் விருத்தியடையும் இயல்பினையும் கொண்டது எனக் கருதுகின்றது. கூடுதலான சமவாய்ப்பினை நோக்கி நகர்கின்ற சமூக உறவுகளின் தொகுப்பாக அது நோக்கப் படுகின்றது. இது வேறுவிதத்தில் காணக்கூடிய, நிலையான அர்த்தங்கள் மற்றும் கருத்துக்கள் சார்ந்த ஒன்றிணைந்த ஓர் இறுக்கமான எண்ணக்கரு என்பதற்கு மாறாக கூடுதலான நெகிழ்ச்சியுடன், குறைந்தளவிலான நிர்ணயிப்புத் தன்மையுடன் நோக்கப்படுவதாக அமைகின்றது.

மோதலுக்குப் பின்னான ஆய்வுகளில் கையாளப்படும் பிரதான சொற்பிரயோகங்கள் குறித்தும் இவ்வாய்வு ஒரு புதிய பார்வையினைத் தருகின்றது. சமூகங்கள் ஒரு வலுவற்ற எதிர்மறைச் சமாதான நிலையிலிருந்து ஒரு ஆக்க□ர்வமான சமாதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காலகட்டத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பின்னணியில், செய்யப்பட்ட ஆய்வில் வலுவற்ற எதிர்மறையான சமாதான காலத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதுடன், அது மோதலிலிருந்து மீட்புத் தொடர்பாக எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியது மற்றும் அது எவ்வாறு மீட்பு நிலைக்குத் தொடர்ந்து பங்காற்றியுள்ளது என்பவை முக்கியத்துவம் கொண்டவையாகக் கருதப்பட்டுள்ளன.

இவ்வாய்வு, "மனித பாதுகாப்பு" என்ற எண்ணக்கருவின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றது. மனித பாதுகாப்பு என்பது மோதலுக்குப் பின்னான மீட்பு முயற்சி தொடர்பாக அதிகரித்து வந்திருக்கும் செல்வாக்கினைக் கொண்டுள்ள எண்ணக்கருவாகின்றது. 'நீதி பெறுதல்', 'இணக்கப்பாடு ஏற்படுத்துதல்' ஆகியவை பற்றிய விளக்கங்களைப் போல, 'மனிதப் பாதுகாப்பு' என்பதும் ஒரு முடிவான செயலாகக் கருதப்படுவது சரியாகாது. அது, சமூக நிலை மாற்றத்தில் மெதுவாக நடைபெறும் ஒரு செயற்பாடாகக் கருதப்படுவது பொருத்தமாகும். மோதலினால் பாதிக்கப்பட்ட மக்கள், தங்களுடைய சென்றகால அனுபவங்களிலிருந்து விலகிச் செல்வதில், 'காலத்தின் நகர்வு' எத்தகைய முக்கியத்துவம் கொண்ட பங்களிப்பினைச் செய்துள்ளது என்பதை இவ்வாய்வு எடுத்துக் காட்டுகின்றது.

யதார்த்த நிலையிலிருந்து நோக்குமிடத்து, மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தங்களுடைய பிரச்சினைகளின் தீர்வு குறித்து நீதியையும், இணக்கத்தையும் நாடுதலில் சமூக-பொருளாதார நிலை பெருமளவான பாதிப்பினை ஏற்படுத்தியதாக இல்லை என்பதை இவ்வாய்வு தெரிவிக்கின்றது.

ஒவ்வொரு சமூகங்களைக் குறித்தும் அவை தெரிவு செய்யப்படும் நீதி முறைமைகள், சமூகங்களின் கூட்டு அனுபவங்கள், அடையாளம் மற்றும் அவைகளுக்குத் தெரிந்த, அவைகள் மதிக்கின்ற அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கூடுதலாக, நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. எப்படியாயினும், செல்வம், வலையமைப்புகள் மற்றும் அந்தஸ்த்து ஆகியவை எவ்வாறு நீதி பெறுதல் மற்றும் முறைசார்ந்த நீதி ஒழுங்குகள் கிடைப்பது குறித்து செல்வாக்கினைக் கொள்கின்றன என்பது பற்றிய சமூகங்களின் எண்ணங்களும், அனுபவங்களும் கொண்டுவரும் பதிலிறுப்புகள் ஒரு உறுதியான உணர்வு நிலைப்பாட்டினை விளைவிக்கின்றன; அதாவது, செல்வந்தர்களும், நல்ல தொடர்புகள் வைத்திருப்பவர்களும், நீதிமன்ற அமைப்பு மற்றும் காவல்துறையினருக்கு (Police) முறையீடு செய்தல் என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்ள முடிகின்றது. ஆனால், இதுவொரு இலட்சிய வடிவான நிலையாகக் காணப்படுகின்றது அல்லது 'வேறொன்றினைப்' பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைகின்றது. மோதலினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து அவர்களுக்கு இருக்கின்ற கட்டமைப்புகளுக்கு உட்பட்ட விதத்தில் செய்து கொள்ளக் கூடிய தெரிவு நிலைகள் மீது ஆய்வு கவனம் செலுத்துகின்றது.

நேர்காணல்களில் எடுத்துக் காட்டப்படுவது, மோதல்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் குறித்து நீதி கிடைத்தலும் பெறுதலும் முறைசார்ந்த சட்டமுறை வழிகள் என்பவற்றினூடாக மட்டும் நிறைவேற்றப் படுவதில்லை; தங்களுடைய பிரச்சினைகள் சமூக அடிப்படையான நிறுவனங்களினூடாக அணுகப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியவையென உணர்ந்துள்ளனர்.

இவ்வாய்வுக் கட்டுரையில் முன்மொழிவு செய்யப்பட்ட ஆலோசனை குறிப்பிட்ட இக்கருத்தாடலை மேலும் முன்னெடுத்துச் செல்லத் தேவையாகின்றது; அத்துடன் மக்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் நிறுவனங்களை - அவற்றுக்குப் பதிலாக வேறு நிறுவனங்களை அமைப்பதைவிட - பலப்படுத்துவது மிகவும் பொருத்தமான செயலாகும். மேலும், மோதலுக்குப் பின்னான அபிவிருத்தி முயற்சிகளைத் தழுவிய செயற்திட்ட அல்லது நிகழ்ச்சிநிரல் திட்ட முனைவுகளுக்கு ஆதரவு அளித்தலும் முக்கிய சிபாரிசாக முன் வைக்கப்பட்டுள்ளது; இதனால், சமூகங்கள் தங்களுடைய

ஜீவனோபாய வாய்ப்புக்களை முன்னேற்றமடையச் செய்வதுடன், அவற்றினூடாக மீட்பு முயற்சிகள் மேம்படுத்துவதற்கான சூழமைவும் ஏற்பட முடிகின்றது.

இறுதியாக, பரிந்துரைக்கப்படும் ஆலோசனை எதுவென்றால், மோதலினால் பாதிக்கப்படும் சமூகங்களிடையே எவ்வாறு அவற்றின் மீட்பு நடவடிக்கைகள் செயற்பட்டுள்ளன, மற்றும் தங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் எவ்விதம் எதிர் கொள்ளப்பட்டுள்ளன ஆகியவை தொடர்பான முக்கிய தகவல்களை இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கும் மற்றைய சமூகங்களுடன் பகிர்ந்து கொள்வது அவசியமானது. இவ்வாய்விலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள், மோதலில் ஈடுபட்டுள்ள இரு சாராருக்குமிடையே ஏற்பட்டுள்ள முறைசார்ந்த சமாதான செயற்பாட்டுக்குச் சமாந்தரமான வகையில் ஒரு மீட்புச் செயற்பாடும் நடந்து சென்றுள்ளது என்பதைக் காட்டியுள்ளன. இது குறித்து சமூக மட்டத்திலான நிறுவனங்கள், நிலவியுள்ள எதிர்மறையான சமாதானத்தினால் ஊக்குவிக்கப்பட்டதுடன் மற்றும் ஜீவனோபாய மீட்சி ஆகியவையும் உதவியாக இருந்துள்ளன. இத்தகைய செயற்பாட்டின் முக்கியத்துவத்தினை, இவ்வாய்வு சமாதானச் செயல்முறையின் மற்றைய பங்காளர்கள் மற்றும் செய்முறை ஆர்வலர்கள் ஆகியோரின் ஒப்புதல் தேவைப்படுவதை வலியுறுத்துகின்றது. அதற்கு மேலும் ஆதரவு வழங்கப்பட்டு அதனை வளர்ப்பதகு இயன்றவரை அபிவிருத்தி சார்பான தலையீடுகளின் பங்களிப்பும் முக்கியமாகின்றது.

## 1. அறிமுகமும் நியாயப்படுத்தலும்

இவ்வாராய்ச்சி, மோதலுக்குப் பின்னான சூழ்நிலையில் நீதி கிடைத்தல் பற்றி விளங்கிக் கொள்வதுடன், அது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தகைய அர்த்தத்தினைக் கொடுக்கின்றது என்ற விடயங்களை அறிந்து கொள்வதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் இவ்வாய்வு நீதி கிடைத்தல் என்பதில் சமூக-பொருளாதார நிலை எத்தகைய பங்களிப்பினைச் செய்கின்றது; அது நீதி பெறுதலின் வடிவத்தினையும், காலத்தினையும் நிர்ணயிப்பதில் உதவுகின்றதா என்பதையும் அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றது. குறிப்பாக, இவ்வாய்வு மோதலினால் பாதிக்கப்பட்ட மக்கள் தம்முடைய சென்றகால அனுபவங்களிலிருந்து எவ்வாறு விடுபடுகின்றனர், அம்முயற்சியில் நீதி பெறுதல் எத்தகைய பங்களிப்பைச் செய்கின்றது ஆகிய விடயங்களையும் முக்கியமாக நோக்குகின்றது.

எவ்வகையிலான நீதியை மோதலினால் பாதிக்கப்பட்ட மக்கள் நாடுகிறார்கள் என்பதிலும், அதை அவர்கள் நாடும் நோக்கத்திலுமே சமூக-பொருளாதார நிலை ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதே ஆய்வின் மூலாதாரத்திலான ஆதாரமற்ற அனுமானமாகும்.

மோதலினால் பாதிக்கப்பட்ட மக்கள் தம்முடைய மீட்புச் செயல்முறைகளின் போது ஏதோவொரு வகையில் நீதி பெறுதல் தேவைப்படுகின்றது என்ற எடுகோள் முன்பு குறிப்பிட்ட கருதுகோளுடன் நெருக்கமாக இணைந்துள்ளது; இதனுடைய சரி, பிழை பற்றி நுணுக்கமாக ஆராயப்படவுள்ளது. நீதி கிடைத்தல் இல்லாமல் மக்களின் மீட்பு முயற்சி நிறைவு பெறுவது கடினம்; இதனால் மக்களிடையே மனக்குலைவு மற்றும் அதிருப்தி என்பவை தொடர்ந்திருப்பதுடன் சமாதானம் மற்றும் நீண்டகால இணக்கப்பாடு, மீட்சி ஆகியவற்றின் சாத்தியப்பாடும் பாதிக்கப்படலாம்.

> *"அட்டூழியச் செயல்களினால் அழிவுகளுக்குட்படுத்தப்படும் சமூகங்கள், அட்டூழியங்களைப் புரிந்த 'பேயுருவங்களை' எதிர்கொள்வதற்கு வேண்டிய வழிமுறைகளை வடிவமைத்துக் கொள்ளுதல் தேவைப்படுகின்றது. அவ்வாறான கடந்தகால துஷ்பிரயோகங்களைக் கணக்கெடுத்துக் கொள்வதும் வேண்டப்படுகின்றது. அவ்வாறு செய்யாவிடில், தேசங்கள் மற்றும் தனியார்கள் குறித்து கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் குறித்து எதிர்பாராத வகையில் கறைப்படுத்தும் விளைவுகளைக் கொண்டுவர முடிகின்றது. பயங்கரமான அட்டூழியங்களுக்குப் பலியான தனியார்கள் அல்லது வெவ்வேறு பிரிவினர் ஏதோவொரு வகையான கணக்கெடுத்தல், பொறுப்புக் கூறல், ஓரளவு நீதி கிடைத்தல் என்பவை இல்லாமல் தங்களுடைய கசப்பான உணர்வுகளை மறந்து துடைத்தழித்து விடுவார்கள் என்று எண்ணுவதும் பொருத்தமற்றது. அவ்வாறான நிலையில் அவர்களிடத்தே ஆழமான குற்றங்கூறும் உணர்வுகள் பதிந்து விடுவதுடன், அவை எதிர்கால மோதல்களுக்கும் வித்திடுபவையாக அமையலாம்."*
> (Kitz, 1997, pg.2).

இவ்வாய்வு, மேலே குறிப்பிட்ட "பேயுருவங்கள்", "கொடுமையின் வடிவங்கள்" ஆகியவை மோதலினால் பாதிக்கப்பட்ட மன்னாரிலுள்ள மூன்று சமூகங்களின் மக்களினால் எவ்வாறு எதிர் கொள்ளப்பட்டன என்பதை மறுசீராய்வு செய்கின்றது. கடந்தகாலம், எதிர்காலத்தை எதிர்பாராத வகையில் பாதிக்கின்றது என்ற கருத்தினை மீளாய்வு செய்வதுடன் இது நடக்காமல் இருப்பதற்கு வெளியாரின் தலையீடும் நடவடிக்கையும் தேவையானது என்று கூறப்படுவதும் இங்கு விமர்சனத்திற்கு உட்படுத்தப்படுகின்றது.

இவ்வாய்வினில், 'பாதிக்கப்பட்டவர்கள்' என்பவர்கள் வலுவற்றவர்கள் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதிலிருந்து வருகின்ற எண்ணமாக, ஏதோவொரு வகையான 'கணக்கெடுத்தல்', 'பொறுப்புக்கூறல்' ஆகியவை இல்லாமல் மோதலினால் ஏற்படும் அனுபவங்களுக்கு முகம் கொடுக்க முடியாது என்ற நிலைப்பாடு மற்றும் இதனால் ஆழமான குற்றங் கூறும் உணர்வுகளும், எதிர்கால மோதலும் தவிர்க்க முடியாமல் ஏற்படலாம் என்ற எண்ணப்பாங்கு ஆகியவை பொருத்தமற்றவையாக இங்கு கொள்ளப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், நேர்காணல் மூலம் சந்தித்த மக்கள் எல்லோரும், விடுதலைப் புலிகள், இராணுவம் ஆகிய இரு சாராருக்குமிடையே நடந்த மோதலில் வெவ்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டனர்; அவர்கள் தங்களுடைய அனுபவங்களிலிருந்து மீட்புப் பெறுகின்றனர். துன்பங்களை ஏற்று மற்றும் விதியின் செயல்கள் எனக் கருதிக் கொண்டு அவர்கள் நடப்பவர்களல்ல; ஆகவே, அந்த நோக்கில் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக கருதப்படவில்லை. இதற்குப் பதில் நிலையாக அவர்களிடையே ஒரு ஊக்கமுடைய மீட்பு முயற்சிச் செயல்முறை நடந்துள்ளது; அத்தகைய செயற்பாடு, அவர்களுக்கு நடந்தவை பற்றிய எவ்விதமான முறைசார் கணக்கெடுப்பு இல்லாமலும், அவர்களின் சமூகங்களுக்கு வெளியே எவ்வித நீதி பெறுதலும் இல்லாமலும் நடந்தேறியுள்ளது.

### மன்னார் எதற்காகத் தெரிவுசெய்யப்பட்டது?

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு மன்னார் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டது. இதற்கான காரணம், இப்பிரதேசத்தில் அதனுடைய மோதல் தொடர்பான அனுபவங்கள், பின்னான மீட்பு முயற்சிகள் ஆகியவற்றில் சில குறிப்பிட்ட இயல்புகள் ஒன்று சேர்ந்திருந்தன. இம்மாவட்டம் இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) ஆகிய இரு சாராருக்குமிடையே ஏற்பட்ட மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் சில பகுதிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் வேறு சில பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருந்தன. இதன் விளைவாக மோதல் இடம்பெற்ற இடங்களில் அதிகளவு படைமயமாக்கல் காணப்பட்டுள்ளது. இந்தியாவுக்குச் சென்ற அகதிகள் அநேகமானவர்கள் மன்னாரை ஒரு இடைத் தளமாகப் பயன்படுத்தினர். அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர், இப்பிரதேசத்தில் அதிகமான உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களும், அகதிகளும் திரும்பி வந்து மீளக் குடியேறியுள்ளனர். அத்துடன் இப்பிரதேசத்தினூடாக மோதலினால் பாதிக்கப்பட்ட மற்றைய பிரதேசங்களுக்கு மக்கள் சென்று வருவதற்கான வசதிகளும் அதிகரித்தன. ஆனாலும், இப்பின்னணியிலும் மன்னாரில் மோதலுக்குப் பின்னான அபிவிருத்தி முயற்சிகள் குறைவாகவே காணப்பட்டுள்ளன. இது, மற்றைய ஒத்த வகையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுடன் ஒப்பிடுமிடத்துத்

தெளிவாகின்றது. அத்துடன், மன்னார் தொடர்பாக மோதலினால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் மீட்பு முயற்சி ஆகியவை குறித்துக் குறைந்தளவுக்கே ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வு புதிய மற்றும் பயனுள்ள தகவல்களைப் பெறுகின்ற நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது; இவை முக்கியமான பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமூகங்கள் வெவ்வேறு மட்டங்களில் மோதல்களை அனுபவித்துள்ளன. வேறுபட்ட சமய, இனப் பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவது மற்றும் அவற்றின் ஒப்பீட்டு ரீதியான மோதல் பாதிப்புத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட சமூகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வு சம்பந்தமான வெளிக்களப் பகுதிகளில் உள்ள மக்களுடன் நடாத்தப்பட்ட கருத்தாடல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆய்வுத் திட்டத்தின் கட்டமைப்புக் குறித்தும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் புதிய விடயங்கள் ஆராயப்பட வேண்டியவையாக இருந்தன. அத்துடன், இவை வேறு கருத்துக்கள் சேர்க்கப்படுவதற்கும் சவாலாக அமைந்தன. புதிய விடயங்கள் என்று சொல்லப்பட்டவை மோதலுக்குப் பின்னான சில முக்கியமான நிலைமைகளில் எழுந்த மனிதப் பாதுகாப்பு, மற்றும் நீதி கிடைத்தல் மற்றும் சமாதானம், இணக்கப்பாடு ஏற்படுதல் ஆகியவை பற்றிய எண்ணக்கருக்களாக இருந்துள்ளன. பின்வரும் பகுதி இவ்வெண்ணக்கருக்களை அறிமுகம் செய்கின்றது. இவற்றில் சில ஆய்வுக்கு ஒரு பின்னணியினைத் தருகின்றன; மற்றவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களின் சுருக்கத்தினையும் 'வழக்கிலுள்ள நல்லறிவையும்' தருகின்றன. இவை இவ்வாய்வில் விமர்சிக்கப்படுகின்றன.

## 2. ஆய்வின் பின்னணியமைப்பு

### நீதி பற்றிய வரைவிலக்கணங்கள்

நீதி தொடர்பாக இவ்வாய்வினில் கிறைஸ்பேர்க் (Kriesberg) அவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட வரைவிலக்கணம் பயன்படுத்தப்படுகின்றது. அவர் இதுபற்றிக் கூறுவதாவது:

> *"நீதி, ஒரு பல் பரிமாண, தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் செயல்முறைகளைக் குறிப்பிடுகின்றது; அவை தொடர்பு கொண்டிருக்கும் மக்களினால் சமவாய்ப்புடையவை எனக் கருதப்படும் நிலையினை நோக்கிச் செல்லுகின்ற சமூக உறவுகளையும் உள்ளடக்குகின்றன. நீதி ஒருபோதும் முழுமையாக அடையப்படுவதில்லை, அது முரண்பட்ட பண்புகளையும் மற்றும் மாறிவரும் நியமங்களையும் கொண்டுள்ளது."*
> (Kriesberg, 2001- pg.47)

இந்த வரைவிலக்கணத்தின் பிரதான அம்சம், நீதி கிடைத்தல் என்ற எண்ணம் ஒரு தொடர்ந்து செல்லும் செயற்பாடு என்பதுடன் அது ஒரு நிலையான நிகழ்வு அல்லது முடிவடைந்த விடயம் அல்ல. இவ்வரைவிலக்கணம், வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களிலிருந்து வேறுபடுவதும் தெரிகின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால், புதிய நோக்கிலான வரைவிலக்கணம் நீதி என்பது ஒருபொழுதும் முழுமையாக அடையப்படுவதில்லை என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. அது வேறுபட்ட இலட்சியங்கள் மற்றும் பெறுமானங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய வழிமுறையாகும். அத்துடன் இவ்வரைவிலக்கணத்துக்கு ஏற்றதாக, குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்குக் கிடைக்கும் நீதி வேறொரு பிரிவினருக்குக் கிடைப்பதைப் போல ஒன்றாக இருக்க வேண்டிய கட்டாயமுமில்லை. மேலும் 'முரண்பட்ட பண்புகள் மற்றும் மாறும் நியமங்கள்' என்ற நிலைப்பாட்டிலிருந்து நோக்குமிடத்து, நீதி என்பதை வேறுபட்ட வழிகளில் வரைவிலக்கணப்படுத்த முடிகின்றது; மற்றும் ஒரு நீதிச் செயன்முறை குறித்து வேறுபடுகின்ற கருத்துக்கள் இருக்கும் சாத்தியப்பாடும் உண்டு. வேறுபட்ட தேவைகள், செயல் நோக்கமளிப்புகள், கருத்தியல் நிலைகள் மற்றும் பெறுமான முறைமைகள் ஆகியவை எல்லாம் வேறுபட்ட, அநேகம் முரண்படக்கூடிய குறிக்கோள்களைக் கொண்டவையாக உள்ளன.

பாதிக்கப்பட்ட சமூகங்கள் நீதி பெறுதலை ஒரு தீர்வாகக் கொள்ளுதல், அரசின் அனுமதியுடன் தங்களுடைய அனுபவங்களிலிருந்து விலகிச் செல்லுதல் மற்றும் தங்களின் வாழ்வினைத் தொடர்ந்து முன்னெடுத்தல் ஆகிய விடயங்களை எல்லாம் இந்த ஆராய்ச்சித் திட்டத்தின் மையப் பொருளாக அமைகின்றன. இதனை ஒரு வெறும் கருத்தியலான மற்றும் நிறைவு பெறும் இலக்காக நோக்கப்படவில்லை; ஆனால் அது மீட்புச் செயன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மக்களினால் - அம்முறையினூடாக - விருத்தி செய்யப்பட்டுச் செல்வதாக நோக்கப்படுகின்றது. இக்குறிக்கோள், ஆராய்ச்சியாளர்களினால் ஒரு சமூகத்தில் தேர்வாய்வு நடாத்துவதற்கோ அல்லது நன்கொடையாளர்களினால் அபிவிருத்தி உதவியின் நிபந்தனையாகவோ விதிக்கப்பட்ட எண்ணமல்ல. இக்கட்டுரையில் நீதி கிடைத்தல், நீதி பெறுதல் என்பது சமூகங்களினால் அவற்றிடையே, அவற்றுக்காகத் தொடர்ந்து விருத்தி செய்யப்பட்டுச் செல்கின்ற ஒரு நிகழ்வாகின்றது. ஆய்வு மேற்கொண்ட சமூகங்களிடையே, நீதி தொடர்பாக அவ்வெண்ணக்கரு அவர்களிடையே எவ்வாறு விளங்கிக் கொள்ளப்பட்டது என்பது பற்றிய அம்சங்களைக் கண்டறியும் முயற்சியாகவே இவ்வாய்வு வழிப்படுத்தப்பட்டுள்ளது. இம்முயற்சி, முறைசார் சட்டவொழுங்கு, நீதி முறைகள் மற்றும் நீதிமன்றங்கள், உள்ளூர் அதிகார நிறுவனங்கள் மற்றும் காவல்துறை என்பவற்றின் கட்டமைப்புக்கள் ஆகியவற்றை மட்டும் குறிப்பிடுவதாக இல்லை. அத்துடன், மோதல் சூழ்நிலையிலிருந்து எழுகின்ற பிரச்சினைகள் குறித்த தீர்வுகளை நோக்கி சமூகங்களினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மோதலினால் தோற்றுவிக்கப்பட்ட வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் முயற்சிகள் போன்றவை இங்கு கருத்தில் கொள்ளப்படுகின்றன.

## சமாதானம் பற்றிய வரைவிலக்கணங்கள்

வட கிழக்கில் நிலவிய போரில்லாத/சமாதானமில்லாத நிலைமை இந்த ஆய்வினை நடாத்துவதற்கு ஏதுவாக அமைந்தது. ஆராய்ச்சியாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாக குறைந்தளவான இடர்கள் கொண்ட சூழ்நிலையாக இருந்ததும், இவ்வாய்வு குறித்து முக்கியமானதாகக் காணப்பட்டது. இக் காலப்பகுதியில் வன்முறைகள் அதிகளவுக்குத் தவிர்க்கப்பட்ட நிலை இருந்ததும், ஆய்வுக்கு உட்படுத்திய ஒவ்வொரு மூன்று சமூகங்களிடையேயும் முக்கியமான விளைவினை ஏற்படுத்தியது; அச்சமூகங்களில் நீதி கிடைத்தல் மற்றும் மீட்பு என்பவை பற்றிய உணர்வுநிலை மீதும் செல்வாக்கினை உண்டுபண்ணியது. இப்பின்னணியில் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், மோதலில் ஈடுபட்டிருந்த இரு சாராருக்குமிடையே அரசியல் தீர்வு ஏற்படவில்லை, அதில் எவ்வித உடன்பாடும் காணப்படவில்லை. போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளது. இது குறித்து இரு சாராரும் மீண்டும் போரினை ஆரம்பித்திருந்தால் ஏதாவதை இழக்க நேரிடலாம் என்ற காரணம் முக்கியமாக இருந்துள்ளது; அல்லது இருபக்கத்திலும் போர் அல்லது சமாதானம் நோக்கிச் செல்வதில் ஒரு திடமான முடிவினை எடுப்பதற்கான அரசியல் விருப்பாற்றல் இருக்கவில்லை. வெளிப்படையாக மோதல் இல்லாத நிலையினைச் சமாதானம் என்று அழைப்பதும் பொருத்தமற்றது. ஆனாலும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சமூகங்களைப் பொறுத்தவரை, உடல் ரீதியான வன்முறை ஏற்படும் ஆபத்து நீக்கப்பட்டது ஒரு முக்கியமான மாற்றமாக இருந்துள்ளது. இது சமூகங்களிடையே ஒரு பாதுகாப்பு உணர்வினைக் கொண்டு வந்தது மட்டுமன்றி மக்கள் சுதந்திரமாக நடமாடவும் முடிந்தது. அத்துடன், பண்டங்களையும் இடத்துக்கிடம் எடுத்துச் செல்ல முடிந்தது. வெளிப்படையான பகைமை நிலை இல்லாமல் காணப்பட்டது வரவேற்கக்கூடிய சமாதானத்தை சமூகங்களுக்கு வழங்கியது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. இந்த சமாதானம் என்ற நிலைப்பாடு, ஏற்றுக் கொள்ளப்படும் சமாதானம் என்ற எண்ணக்கருவுக்குச் சவால் விடுவதாக அமைகின்றது.

> *"சமாதானம் என்பது அதிகளவுக்கு வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டுள்ளது; இதன் எல்லையானது, திணிக்கப்பட்ட கட்டளை என்பதிலிருந்து நேசமான ஐக்கியம் வரை செல்கின்றது. நேரடியான உடல்ரீதியான வன்முறையற்ற நிலை அல்லது எந்தவொரு பிரிவினரும் கட்டமைப்புச் சார்ந்த வன்முறை அனுபவிக்காத நிலை என்பவற்றைச் சமாதானம் குறிப்பிடுகின்றது. இதில் முதலில் கூறப்பட்டதனை எதிர்மறையான சமாதானம் எனவும், இரண்டாவதாகக் குறிப்பிட்டதனை ஆக்கபூர்வமான சமாதானம் எனவும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. எதிர்மறைச் சமாதானம், போர், மோதல் என்பன இல்லாத நிலையினைக் குறிப்பிடுகின்றது; அது ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கலாம்; ஆனால், அநீதி பற்றிய குறைதீர்வு குறித்த போராட்டங்களுக்கு எதிர்ப்பினை அடக்குதலும் இதில் அடங்கும். ஆக்கபூர்வமான சமாதானம், அதே சமூக அமைப்பில் மக்களின் அடிப்படை வாழ்க்கை நிலை தொடர்பாக குறைந்தபட்ச அளவுக்குச் சமத்துவம் எட்டியுள்ள நிலையினைக் குறிப்பிடுகின்றது."*
> (Galtung, 1996:48)

இவ்வாய்வு, ஒரு வலுவில்லாத 'எதிர் மறையான' சமாதானம் மன்னாரில் (முழு இலங்கையிலும்) நிலவிய பொழுது நடாத்தப்பட்டது. 2002 ஆம் ஆண்டில் போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் மோதலின் உக்கிரத்தன்மை மாறியது. இரு சாராரினாலும் போர் நிறுத்த உடன்படிக்கை அடிக்கடி மீறப்பட்டுள்ள பொழுதிலும், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமூகங்களிடையே மோதல் மெதுவாக ஒரு முடிவினைச் சென்றடையும் கட்டம் சாத்தியமாகும் என்ற உணர்வு காணப்பட்டது. இதனைக் கூறுமிடத்து, சமூகங்களிலுள்ள மக்கள் நிரந்தரச் சமாதானம் ஏற்பட்டுவிடும் என்று கருதவில்லை. ஆனால், காலப்போக்கில் கூடுதலான ஒரு சமாதான நிலை உருவாகலாம் என்ற உணர்வினை வெளிப்படுத்தினர். அது, இன்னும் அடைவதற்குக் காலமெடுக்கும் வேளையில், அக்காலங்களில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்திகள் பற்றிய நம்பிக்கை, முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்குச் சாத்தியப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளது.

செய்யப்பட்ட ஆய்வு எதிர்மறையான சமாதான நிலையிலிருந்து ஒரு ஆக்கபூர்வமான நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்லும் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில் கவனிக்க வேண்டிய விடயம், எதிர்மறையான சமாதானம் வெளித்தோற்றத்தில் எவ்வளவுக்கு நீடித்துள்ளது என்பதும், கட்டமைப்பு மாற்றமில்லாத வேளையிலும் மற்றும் அதிகரித்துச் சென்ற சமமின்மையின் மத்தியிலும் மக்கள் தங்களுடைய வாழ்வினை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இப்பின்னணியில், நிலைமாற்றம் தேவையானது மற்றும் ஆக்கபூர்வமான சமாதானமே வேண்டப்படும் நிலை என்ற முன்கூட்டியே கொண்டுள்ள எண்ணங்களுக்கு இவ்வாய்வு சவால் விடுகின்றது. வேறுபட்ட சமாதான நிலைகள் பற்றிக் கேள்வி எழுப்புவதும் அல்லது அவைகள் தொடர்பான நன்மைகள் பற்றி விவாதிப்பதும் இவ்வாய்வின் நோக்கமல்ல. ஆனால், அது வலியுறுத்துவது என்னவென்றால், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமூகங்கள் மோதலிலிருந்து மீட்புப் பெறுவதில் எதிர் மறைவான சமாதானம் நிறுவப்படுவது போதுமான ஆரம்பத்தைக் கொடுத்துள்ளது. மேலும், ஆக்கபூர்வமான சமாதானம் என்பதற்குத் தேவையான குறைந்தபட்ச அளவான சமத்துவம் இல்லாமலிருப்பது ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாராய்ச்சி, மோதலினால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்திலுள்ள சமூகங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது; மற்றைய பிரதேசங்களும், நாடும் வேறுபட்ட விதத்தில் மோதலினால் பாதிக்கப்பட்டதும் அறியப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள வாழ்க்கை நிலைமைகள் சமத்துவமான வாய்ப்புடையவையாக இருக்கவில்லை என்ற உணர்வின் அடிப்படையில் முரண்பாடும், மோதலும் எழுந்தன. அத்தகைய சமத்துவமான கட்டத்தினை அடைவதற்கு பெரியளவிலான சமூகநிலை மாற்றம் தேவைப்படுகின்றது. அத்தகைய ஒரு சமூக நிலை மாற்றம் தேவையானது என்பதை எதிர்த்து வாதாடுவது எமது நோக்கமல்ல. ஆனால் கவனத்தில் கொள்ளவேண்டியது, இத்தகைய மாற்றம் ஒரு பெரியளவிலான சவாலாக அமைகின்றது என்பதுடன் அது இன்னும் ஒரு தூரத்து இலக்காகவே இன்றைய மோதல் மீட்புச் சூழலில் காணப்படுகின்றது. இங்கு குறிப்பிட்ட வகையான சமூக நிலை மாற்றத்தில் மீட்பு முயற்சிகள் தங்கியுள்ளனவா என்ற கேள்வியும் இவ்வாய்வில் எழுப்பப்படவுள்ளது.

### மனித பாதுகாப்பு

ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட சமூகங்கள் வெளிப்படையான மோதல்கள் இல்லாதிருப்பது, அச் சமூக மக்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வினைக் கொடுத்துள்ளது. நேரடியான மோதலை அனுபவித்த சமூகங்கள் பெரியளவிலான ஆயுதந் தாங்கிய வன்முறை நின்றவுடன் பாதுகாப்பான உணர்வு நிலையினை அனுபவிப்பது நம்பக்கூடியதாக உள்ளது. 'பாதுகாப்பு' என்ற சொற்றொடர் எதனைக் குறிக்கின்றது என்பதனை மாற்றியமைக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. மோதல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்தாடலில் எழுந்துள்ள மனித பாதுகாப்பு என்ற எண்ணக்கரு குறித்தும், அது எதனைக் குறிப்பிடுகின்றது என்பதைப் பற்றியும் இவ்வாய்வு கேள்வி எழுப்புகின்றது. ஒரு குறிப்பிட்ட சூழமைவில் பாதுகாப்பற்ற நிலையில் எல்லா அம்சங்களையும் கணக்கில் கொண்டு ஒரு முழுமையான பார்வையினை உள்ளடக்கியதான பாதுகாப்பு என்பதன் இலட்சிய நிலையின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக ஐயப்பாடு எழுகின்றது. மக்களினால் அனுபவிக்கப்படுகின்ற தற்காலிகமான பாதுகாப்பு நிலை உணர்வு அவர்களின் மீட்பு முயற்சிகளைத் தொடங்குவதற்குப் போதுமானது. ஆதலால், மனிதப் பாதுகாப்பு போன்ற புதிய எண்ணக்கருக்கள் தேவைதானா என்ற கேள்வி எழுகின்றது. அத்துடன், எதற்காக அபிவிருத்தி பற்றிய கருத்தாடலில் அத்தகைய எண்ணக் கருக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதும், மற்றும் மோதலிலிருந்து மீட்புப் பெறுதல் முயற்சிகள் போன்ற சமூகச் செயன்முறைகள் ஏன் அத்தகைய கண்ணாடிகளினூடாக நோக்கப்படுகின்றன என்பதும் கேள்விக்குரிய விடயங்களாகின்றன.

> *"மனிதப் பாதுகாப்பு என்பது, ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டுடனான காப்புநிலை, அச்சுறுத்தல் அல்லது தீங்கு விளைவித்தல் என்பவற்றிலிருந்து விடுபடுதல் என்பவற்றுடன், மனித உரிமைகளின் பாதுகாப்புகள் மற்றும் மனித கௌரவத்தினை உறுதிப்படுத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கிய நிலையாகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மனித அபிவிருத்தி அறிக்கை (1994) மனிதப் பாதுகாப்பினை இரண்டு பிரதான அம்சங்களைக் கொண்டதாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. அவையாவன: முதலாவது, பசி, பிணி மற்றும் அடக்குமுறை ஆகியவற்றின் 'நீடித்த' அச்சுறுத்தல்களிலிருந்து கிடைக்கும் காப்புநிலை; இரண்டாவது, அன்றாட வாழ்க்கை முறையில் திடீரென்று கேடு, துன்பம் விளைவிக்கும் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பு."*
> (UNDP 1994:pg. 23)

> *"மனிதப் பாதுகாப்புப் பற்றிய அம்சங்கள், பொருளாதாரம், உணவு, சுகாதாரம், சூழல் மற்றும் தனிப்பட்ட சமூக மற்றும் அரசியல் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்குவதுடன், அவற்றிடையேயுள்ள இடைத் தொடர்புகளும் முக்கியமாகின்றன. ஏதாவதொன்று மறுக்கப்பட்டால் அது எல்லாவற்றையும் பாதிக்கின்றது."*
> (Thomson-Senanayake 2002: Pg 10)

இதிலிருந்து மேலும் அறியக் கூடியது, மோதலிலிருந்து மீட்பு முயற்சி குறித்து மனிதப் பாதுகாப்பு பற்றிய கருத்தாடல் பங்களிப்புச் செய்வது தேவையாகின்றது. இதனை வெளிப்படையாகப் பின்வரும் பகுதி கூறுகின்றது:

> *"இடைமாறுதலான நீதி பற்றிய சூழமைவில், இணக்கப்பாடு நிறுவுதல் மற்றும் உற்சாகம் நிறைந்த சனநாயக சமூகத்தினை அமைத்தல் ஆகியவற்றுக்கு முக்கிய தேவையான மனிதப் பாதுகாப்புத் தொடர்பான எல்லா அம்சங்களின் மீட்டளிப்பு அவசியமாகின்றது. உக்கிரமான உள்நாட்டு மோதல் அல்லது அடக்குமுறை என்பவற்றிலிருந்து வெளியே வருகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சமூகங்களில், அரசியல், தனியார் மற்றும் சமூக நோக்கிலான பாதுகாப்புக் குறித்த எல்லா அம்சங்களும் உயர்ந்தளவான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. அதேவேளை, சமூகத்தில் ஒருவருடைய இடத்தினை மீண்டும் பெற்றுக் கொள்வதில், பொருளாதார நிலை, உணவு மற்றும் சுகாதாரம் தொடர்பான பாதுகாப்பு என்பவையும் - இவை நாளாந்த மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துபவை – உள்ளடக்கப்படுகின்றன."*
> (Thomson-Senanayake 2002: pg.10).

இந்த நிலைப்பாடு, மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் விவாதத்திற்குரியதாகின்றது. 'மனிதப் பாதுகாப்புத் தொடர்பான எல்லா அம்சங்களின்' மீட்டளிப்பு என்ற உள்ளார்ந்த நிபந்தனையும் கேள்விக்குரியதெனக் கருதப்படுகின்றது. இவ்வாய்வு மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான கரிசனைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது; அதேவேளை, இதில் இணக்கப்பாடு ஏற்படுத்தல் அல்லது உற்சாகமான சனநாயகம் நிறுவப்படல் ஆகியவை சேர்க்கப் படவில்லை. இவ்வாய்வில் கண்டறிந்தவற்றில், இணக்கப்பாடு ஏற்படுத்துதல் சமூகத்திற்குத் தூரத்தேயுள்ள ஒரு நேர்வாகக் காணப்படுமிடத்து, உயிர்த் துடிப்புள்ள சனநாயக சமூகத்தினை அமைத்தல் கவனத்தில் எடுக்கக்கூடிய விடயமல்ல. ஆதலால், ஆராய்ச்சியிலிருந்து தெரியப் படுத்தியவை இத்தகைய எண்ணக்கருக்கள் குறித்த பொருத்தப்பாட்டுக்கு ஐயப்பாட்டைத் தெரிவிக்கின்றது; அத்துடன் இவ்வெண்ணக்கருக்களை, மோதலுக்குப் பின்னான கருத்தாடலில் சேர்த்துக் கொள்ளுதல் எவ்வாறு ஒரு செயற்கை நிலையான எதிர்பார்ப்புக்களை வினவிப்பதுடன், செயற்கைவிதமான தேவைகளையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மக்கள் தம்முடைய மீட்பு முயற்சிகளைத் தொடக்கி அவற்றைப் பேணுவதில் உண்மையில் சிறிதளவான தேவைகளை மட்டும் வேண்டி நிற்பவர்கள் என்ற அடிப்படையில், என்ன தேவைப்படுகின்றன என்பது பற்றித் தவறான எண்ணங்களை ஊக்குவிக்கும் மேலாதிக்கம் செலுத்தும் எண்ணக்கருக்களுடன் உடன்பாடின்மை ஏற்பட்டுள்ளது.

### இணக்கப்பாடு பற்றிய வரைவிலக்கணங்கள்

மனிதப் பாதுகாப்பு எண்ணக்கருவின் பொருத்தப்பாட்டுக்குச் சவால் விடுவதுடன், இவ்வாய்வு 'இணக்கப்பாடு' தொடர்பாக ஒரு வேறுபட்ட விளக்கப்பாட்டினை முன்வைக்கின்றது. இணக்கப்பாடு பற்றிய முறைசார் வரைவிலக்கணம் பின்வருமாறு:

*"நிலைமாறுதலான நீதி தொடர்பான செயன்முறையில் ஒரு கணப்பொழுதாக இணக்கப்பாடு உள்ளடங்குகின்றது; அவ்வாறான நிலைமாறும் நீதிச் செயற்பாட்டில், சென்ற காலத்தின் அக்கறைகள் மற்றும் அத்தகைய அக்கறைகள் ஒப்புக் கொள்ளப்படுவதுடன் அவை விலக்க முடியாத வகையில் எதிர்காலம் பற்றிய அக்கறைகள் மற்றும் அபிலாஷைகள் ஆகியவற்றுடன் இணைக்கப்படுபவையாக அமைகின்றன."*
(Thomson-Senanayake 2002: Pg 11).

எம்முடைய ஆய்வில் தெரியப்படுத்தியது, இக் 'கணப்பொழுது' என்பது ஒரு நீண்டகாலமாக இருக்கலாம். இணக்கப்பாடு என்பதும், நீதியைப் போலவே, ஏதோவொரு நாளில் அடையப்படுவதல்ல, ஆனால் அதனை நோக்கிச் செயற்படுகின்ற முயற்சியாகின்றது. அவ்வாறு அவ்விலட்சியத்தினை நோக்கிச் செயற்படுவது சமூகத்தின் மீது பெரியளவிலான நிலைமாற்றச் சார்பான தாக்கத்தினை ஏற்படுத்த முடிகின்றது. குறிப்பிட்ட வரைவிலக்கணத்தில் ஓரளவான நிகழ்வுகளின் முன்னேற்றக் கட்டங்களை இணக்கப்பாடு என்ற 'கணப்பொழுதிற்குள்' அடக்கப்படுவதாகக் கருத முடிகின்றது. ஆனால், ஆய்விலிருந்து கண்டு கொண்டவை காட்டுவது, அவ்வாறான முன்னேற்றமடைந்த முறையில் செல்வது எப்பொழுதும் நடப்பவையல்ல; சென்ற காலத்து அக்கறைகள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருப்பதுடன், அவை எதிர்காலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துபவை என்பதும் அறிந்து கொள்ளப்படுகின்றது. இவ்வாறு அறிந்து கொள்ளப் படுதல், அதிகளவுக்கு இணக்கப்பாடு ஏற்பட வேண்டிய தேசிய மட்டத்திற்கு வெளியே சமூக மட்டத்தில் ஏற்பட்டுள்ளது என்பது தெரிகின்றது. தேசிய மட்டத்தில் இவை தொடர்பான கரிசனைகள் விரும்பிய தேசிய அரசியல் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன; இதனால், இணக்கப்பாட்டிலிருந்து விலகிப் புதுப்பிக்கப்படும் மோதல் அல்லது நீண்டகாலத்துக்குச் செல்லும் மோதல் ஏற்படும் வாய்ப்புக்கு வழிகோலுகின்றது.

கடுமையான அடக்குமுறை அல்லது மோதல் என்பவற்றை அனுபவிக்கின்ற சமூகங்களில் இணக்கப்பாடு ஏற்படுத்துதல், உடல் ரீதியான பாதுகாப்பு மற்றும் மேலும் கூடுதலான வன்முறையின் அச்சுறுத்தல் நிலை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகியவை உள்ளடங்கலான விடயங்கள் மீது தங்கியுள்ளது. அதற்குத் தேவையாக இருப்பவை –

*"கட்டமைப்பு ரீதியாக சமமின்மைகள் இருப்பதும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சமூகங்களில் பொருள்சார் அடிப்படைத் தேவைகள் குறித்துக் கவனம் செலுத்துதல்; சமூகத்தில் இயல்பாக இருக்கக்கூடிய இணைப்புக்களின் முன்பு எதிர்நிலையிலிருந்த சாராரை ஒன்று சேர்க்கும் பங்களிப்பு ஏற்படுவது அல்லது (பொதுவாகக் கவனிக்கப்படாத) எளிமையான, சாதாரண காலத்தின் நகர்வின் முக்கியத்துவம் சேருதல்."*
(Hayner -2002: Pg. 6)

இவ்வாய்விலிருந்து, சாதாரண விடயமான 'காலத்தின் நகர்வு', பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே, இணக்கப்பாடு ஏற்படுதல் குறித்தும் மற்றும் மீட்பு முயற்சிகள் தொடர்பாகவும் ஒரு முக்கிய செல்வாக்கு வகிக்கும் காரணியாக வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. அச்சமூகங்களின் மக்கள் காலத்தைப் பற்றிக் கதைக்கும் விதத்தில் அது அவ்வளவுக்கு எளிமையானதல்ல என்பதையும் தெரிந்துள்ளனர். அவர்கள் மோதல் நடந்த காலத்திலிருந்து அனுபவித்தவை, தம்முடைய ஜீவனோபாய முறைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எடுத்த காலம் மற்றும் பரவலான வன்முறையின் அச்சுறுத்தல்கள் இல்லாத காலத்தின் அனுபவம் ஆகியவை எல்லாம் அவர்களின் மீட்பு முயற்சியின் விலை மதிப்பற்ற பகுதியாகக் காணப்படுகின்றன. இன்றைய கட்டத்தில் உடல் ரீதியான பாதுகாப்பு நிறுவப்படுகின்ற நேரத்தில், உறுதியற்றதாகக் காண்கின்ற போர் நிறுத்த உடன்படிக்கை மேலும் கூடுதலான வன்முறை அச்சுறுத்தலுக்கு முடிவினைத் தருகின்றது என்ற நம்பிக்கை, மற்றும் சமூதாய ரீதியான அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவை எல்லாம் மீட்புச் செயல்முறை, மற்றும் இணக்கப்பாடு என்பவை குறித்து முக்கிய பங்களிப்பைச் செய்த காரணிகளாக இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளன.

### முடிவுரை

மோதலுக்குப் பின்னாக, நீதியும் மீட்பும் தொடர்பாகத் தற்பொழுது நடந்து வருகின்ற கருத்தாடலுக்குள் இவ்வாராய்ச்சியினைச் சூழமைவுப்படுத்தும் நோக்கத்துடன் இப்பகுதி எழுதப்பட்டுள்ளது; பின்னர் இக்கட்டுரையில் விரிவாக வரவுள்ள முக்கியமான விடயங்களை அறிமுகஞ் செய்வதும் தேவைப்படுகின்றது. இவ்வாய்வில், நீதி கிடைத்தல் குறித்து, அது அடைந்து கொள்ளும் ஒரு முடிவு நிலையாகக் கருதப்படாமல், அதற்குப் பதிலாக, அதனை ஒரு செயல்முறையாக நோக்குவது பிரதான கருத்தாக இருப்பதுடன், இவ்வரைவிலக்கணம் இக்கட்டுரையில் விரிவான முறையில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வணுகுமுறை, குறிப்பிட்ட விடயத்தினை, ஒரு நிலைப்படுத்திய மற்றும் தொடர்பான அர்த்தங்களைச் சேர்த்து ஒரு இறுக்கமான எண்ணக்கருவாகக் கொள்ளப்படவில்லை; மாறாக, அதனை ஒரு நெகிழ்வான கட்டளையிடப்படாத நோக்கில் நீதியினை அணுகும் வழி முன் வைக்கப்பட்டுள்ளது. இச்செய்திட்டம் ஆய்வுக்குட்படுத்திய சமூகங்கள் ஒரு வலுவில்லாத எதிர்மறைச் சமாதானத்திலிருந்து, சாத்தியமுடைய ஆக்கபூர்வமான சமாதானம் ஏற்படும் காலகட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பின்னணியில், எதிர்மறைச் சமாதானக் காலத்தின் முக்கியத்துவத்தினை ஆய்வு வலியுறுத்துவதுடன், அது எவ்வாறு மோதலிலிருந்து மீட்புப் பெறுதல் குறித்து பங்களிப்பினைச் செய்துள்ளது என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது.

மனிதப் பாதுகாப்பு என்பதும் கூடுதலான அளவுக்கு மோதலுக்குப் பின்னான மீட்பு முயற்சிகளில் ஒரு முக்கியமான மற்றும் செல்வாக்கு வகிக்கும் எண்ணக்கருவாக மாறியுள்ளது. எப்படியாயினும், இவ்வெண்ணக்கருவின் பல மூலக்கூறுகளின் குறைபாடுகளை இவ்வாய்வு எடுத்துக் காட்டுகின்றது. 'நீதி' மற்றும் 'இணக்கப்பாடு' என்பவற்றைப் போலவே 'மனித பாதுகாப்பும்' ஒரு முடிவு நிலையாகக் கருதுவது சரியல்ல; பதிலாக அதனை மெதுவாக நடந்தேறும் சமூக நிலைமாற்றத்தின் செயன்முறையாகக் கருதுவது பொருத்தமானதாகும். இது இவ்வாய்வில் 'காலத்தின் நகர்வு' என்பதனுடைய முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது; அது இக்கட்டுரையின் மையப் பொருளாகவும் அமைகின்றது.

## 3. ஆய்வுக்கான சமூகங்கள்

ஆய்வுக்கென்று குறிப்பிட்ட பிரதேசத்தில் சமூகங்கள் தெரிவு செய்யப்பட்டன. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மாவட்டத்தில் இச்சமூகங்கள் அவற்றின் இனத்துவ, சமயசார்பான உள்ளமைவினைப் பிரதிபலித்துள்ளன; அத்துடன் இச்சமூக மக்கள் மோதலினை வெவ்வேறு வழிகளிலும் மீட்பு முயற்சியின் வெவ்வேறு கட்டங்களிலும் அனுபவித்துள்ளனர். குடிசன அமைவு சார்ந்த மற்றும் மோதல் தொடர்பான காரணிகளை விட, இச்சமூகங்கள் வேறுபட்ட சமூக-பொருளாதாரப் பண்புகளையும் கொண்டுள்ளன.

KRI[1]

KRI என வகைப்படுத்தி ஆய்வுக்காக இனங்கண்டு கொள்ளப்பட்டவர்கள் ஒரு பகுதியளவான நகர்ப்புறப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இப்பிரதேசம் மன்னார் நகரம் குறித்து இலகுவான தொடர்பினைக் கொண்டிருந்தது. இச்சமூகப் பிரிவினர் பெருமளவுக்கு நடுத்தர வகுப்பினைச் சேர்ந்தவர்கள்; இனத்துவ ரீதியில் இச்சமூகத்தினர் அதிகளவுக்குத் தமிழர்கள் மற்றும் அவர்களின் பிரதான மதம் இந்து சமயம். இவர்களில் 90 சதவீதத்தினர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் (IDP). அவர்கள் வடக்கிலும், கிழக்கிலும் இருந்து இடம்பெயர்ந்தவர்கள்; இப்பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்டு பல ஆண்டுகளாக அங்கு வாழ்கின்றனர்.

MSL

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளான பிரதேசத்திரல் உள்ள ஒரு கிராமிய சமூகத்தினர். இச்சமூகத்தினர் பாதைகள் பழுதடைந்திருப்பதனாலும், அரசாங்கப் போக்குவரத்து வசதிகள் போதியளவுக்கு இல்லாததாலும், மற்றைய பிரதான பாதைகளிலிருந்து தனிமைப்படுத்திய நிலையில் உள்ளனர்; இதனால் இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பில்லாது காணப்பட்டனர். இங்குள்ளவர்கள் இனத்துவ ரீதியில் முஸ்லிம்களாவர் மற்றும் பிரதான சமயமாக இஸ்லாம் காணப்படுகின்றது. மூன்று கிராமங்களிலிருந்து 70 குடும்பத்தினர் அண்மையில் மீள் குடியமர்வுக்காக ஆய்வு நடாத்துவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னராக வந்து சேர்ந்தனர். இக்கிராமத்துக்கு திரும்பி வந்தவர்களில் சிலர் பரம்பரையான நிலங்களை உடையவர்களாகக் காணப்பட்டனர். மற்றைய மக்கள் இக்கிராமத்திற்குள் வந்து சேர்ந்ததற்கு விவாகம் மற்றும் சமூக உறவுகள் காரணங்களாகக் காணப்பட்டன. இச்சமூகத்தவர்களின் பிரதேசம் பொருளாதார ரீதியில் வசதியற்றதாக இருந்ததுடன், மீள் குடியமர்வுக்காக ஆதரவளிக்கும் உட்கட்டுமான வசதிகள் மிகக் குறைந்து காணப்பட்டுள்ளன. பிரதானமாக இப்பிரதேசம் விவசாய மக்களைக் கொண்டிருப்பினும், நீர்ப்பாசன அமைப்பும் மற்றும் ஜீவனோபாய நடவடிக்கைகள் குறித்த உட்கட்டுமான வசதிகள் மோதலின் பாதகமான விளைவுகளினால் சீர்குலைந்தன. வெளியிலிருந்து இச்சமூகத்தினர் மிகக் குறைந்த உதவியினையே பெறுகின்றனர்.

NNT

NTT என்பது ஒரு அரைவாசி நகரப்புறச் சார்பு கொண்ட சமூகமாகக் காணப்பட்டுள்ளது. இப் பிரதேசம், மன்னார் நகரத்திலிருந்து ஓரளவு தூரத்தில் இருப்பினும், பிரதான பாதைகளினூடாகச் சென்று வரும் வாய்ப்பு காணப்பட்கிறது. இப்பிரதேசம் பெருமளவுக்கு தமிழர்களை உள்ளடக்குவதுடன், அவர்கள் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அறியப்பட்டுள்ளது. 1990-1993 காலப்பகுதியில், இச்சமூகத்தவர்களில் சிலர் இடம்பெயர்ந்து மன்னார் மடுப்பிரதேசத்திற்கு அல்லது அங்கிருந்து தென்னிந்தியாவுக்குச் சென்றுள்ளனர். 1994க்குப் பின்னாக தம்முடைய பிரதேசத்திற்குத் திரும்பியுள்ளனர். மோதல் காலத்தில் அவர்கள் இடம்பெயர்ந்தனர்; ஆனால் இவ்வாய்வு தொடங்குவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் மீள்குடியேற்றப்பட்டனர். பயிர்ச்செய்கை மற்றும் சிறுவர்த்தகம் ஆகியவை பிரதான ஜீவனோபாய நடவடிக்கைகளின் மூலங்களாக அமைந்தன.

## 4. ஆய்வின் அணுகுமுறை

இவ்வாய்வு, அதனுடைய தேவையினைக் கருதி மாதிரி (purposive sampling) முறையில் தேர்ந்த எடுப்பினைப் பயன்படுத்தி உள்ளது. மன்னாரிலுள்ள ஒரு அமைப்பின் உதவியுடன் ஆய்வுக்கான மாதிரி எடுப்பு (sample) நேர்காணல் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டது. ஆய்வின் கவனத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்கள் அநேகம் நுண்ணுணர்வுத் தன்மை வாய்ந்தவையாக இருந்ததனால் குறிப்பிட்ட சமூகத் தினருக்கு ஒரு ஆரம்ப அறிமுகப்படுத்தல் செய்வதற்கு உள்ளூர் அமைப்பொன்றின் நம்பிக்கைக்குரியவர்களின் உதவி தேவைப்பட்டது. இரு தமிழ் சமூகத்தினரும் மற்றும் ஒரு முஸ்லிம் சமூகத்தினரும் இனத்துவ ரீதியான வேறுபாட்டைப் பிரதிபலிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டனர். அதேவேளை இடம்பெயர்தல் மற்றும் அதன் பின்னர் திரும்பி வருதல் ஆகியவற்றைத் தழுவி, மோதலினால் பாதிக்கப்பட்ட அளவினையும், தன்மையினையும் வெளிப்படுத்தும் நோக்கமும் ஆய்வில் முக்கியமாக இருந்துள்ளது. இவ்வாய்வில் உதவிய சமூகங்களில் ஒன்று ஆய்வு நடாத்துவதற்குச் சில மாதங்கள் முன்னராக அவ்விடத்திற்குத் திரும்பி வந்துள்ளனர். இன்னொரு சமூகத்தவர்கள் இடம்பெயர்தலுக்கு உட்பட நேர்ந்தது; ஆனால் ஆய்வு நடாத்துவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னராகத் திரும்பி வந்துள்ளனர். மற்றைய சமூகம் மன்னார் நகரத்துக்கு அண்மையில் இருந்தது, அதற்கு முக்கியளவான இடம்பெயர்தல் அனுபவம் ஏற்படவில்லை.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சமூகங்களின் இல்லத்தினர் (households) தெரிவு செய்யப்பட்டனர்; இதனூடாக உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் தகவல்களின் அடிப்படையில் அதிகளவான சமூக-பொருளாதார வேறுபாடுகளையும், பௌதீக சொத்துக்களின் நிலைமைகளின் வேறுபாட்டையும் பிரதிபலிக்கச் செய்வது நோக்கமாக இருந்துள்ளது. இவை நேர்காணலின் முதல் கட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டன. இதற்கு அடுத்ததாக பதிலளிப்பாளர்களை (respondents)

[1] பதிலளித்தவர்களின் அநாமதேயத்தைப் பேணும் முகமாக இக்கட்டுரையில் சமூகங்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

உயர்ந்த, நடுத்தர மற்றும் கீழ்மட்ட சமூக-பொருளாதார நிலை என்ற விதத்தில் வகைப்படுத்தியதும் முக்கியமாகின்றது; இது குறித்தும், சமூக-பொருளாதார நிலை என்பதைத் தகவல்களின் அடிப்படையிலும் மற்றும் இல்லத்தினரின் சொந்த மதிப்பீடு - தங்களுடைய சமூகத்தினர் தொடர்பாக – ஆகியவற்றைத் தழுவியும் வகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சமூகங்களிலிருந்து தகவல், ஆய்வுக் குழுவினரால் விருத்தி செய்யப்பட்ட அரைவாசி கட்டமைப்புச் சார்ந்த நேர்காணல் முறையினைப் பயன்படுத்திச் சேகரிக்கப்பட்டது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் வறுமை ஆய்வு நிலையத்தில் (CEPA) தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. இதன் விளைவாகக் கிடைக்கப்பெற்ற செய்முறைக் கட்டுரை இறுதியாகப் பிரசுரிக்கப்படுவதற்கு முன்பாக ஒப்பானொருவரினால் மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் பங்கெடுத்த, தனி நபர்கள், சமூகங்கள் ஆகியவை கொள்நெறி அடிப்படையில் வெளிப்படையாக இனங்கண்டு கொள்ளப்படவில்லை. நேர்காணலில் இருந்து பிரித்தெடுத்த பகுதிகள், பதிலளிப்பாளர்களின் பால், வயது மற்றும் சமூகம் ஆகியவை குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வினைச் செய்வதற்கான தகவல் அதிக நுண்ணுணர்வுத் தன்மையுடையவை என்ற காரணத்தால், பங்கெடுக்கும் சமூகத்தினர் மீது பாதகமான விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, பெயர்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

## 5. மோதல்கள் தொடர்பான அனுபவங்கள்

மோதல்கள் ஒவ்வொரு சமூகத்தினையும் அதனுடைய குடும்பங்களையும் வெவ்வேறு விதத்தில் பாதித்துள்ளன. அப்படியாயினும், ஆய்வில் சேர்ந்த சமூகங்களிடையே இனத்துவ உள்ளமைவு, இட அமைவு மற்றும் சமூக-பொருளாதார நிலை தொடர்பான வேறுபாடுகள் இருப்பினும், சமூகங்களின் மோதல் குறித்த அனுபவங்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்தவையாகக் காணப்பட்டுள்ளன. பொதுவான, இழையோடியிருக்கும் அம்சங்களைத் தொகுத்து, மீட்புச் செயன்முறை பற்றிய விடயங்களை ஆராய்வதற்கான ஒரு அடித்தள நோக்காக மோதல் தொடர்பான நுண்ணுணர்வுத் தன்மை பற்றிய ஒருமுகப்படுத்திய விளக்கத்தினை இப்பகுதி தருகின்றது.

### மோதல் அனுபவங்கள் - KRI

> "*மோதல் காரணமாக நாங்கள் இந்தியா சென்றோம். 1985இல் இருந்து 1989 வரை நாங்கள் இந்தியாவில் ஒரு அகதி முகாமில் வசித்துள்ளோம். 1989இல் மன்னாருக்குக் கடல் வழியாகத் திரும்பினோம். 2001இல் இலங்கைப் படையினரால் எங்களுடைய கிராமத்தில் சில வீடுகள் எரிக்கப்பட்டன; ஒரு சில கிராமத்தவர்கள் கடற்படையினரால் கொல்லப்பட்டனர்.*"
> (KRI பெ 37).

இச்சமூகத்தவர்களின் மோதல் தொடர்பான அனுபவங்கள், இடப்பெயர்வுக் காலப்பகுதி, மற்றும் அவ்விடங்களில் மீள்குடியமர்வு, மற்றும் நேரடியாகத் தாக்கப்பட்டமை மற்றும் வன்முறைச் சம்பவங்கள் ஆகியவை பிரதான அம்சங்களாக இடம்பெறுகின்றன.

> "*எங்களுடைய சொத்துக்களை நாம் இழந்துள்ளோம். மற்றும் நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து 1990களில் இடம்பெயர்ந்தோம்; எங்களுடைய பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய கல்வியினை மோதல் சம்பவங்கள் காரணமாகத் தொடர்ந்து மேற்கொள்ள முடியவில்லை. எங்களுடைய கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாய் அகதிகள் முகாமில் நான்கு வருடங்களாக வசித்தோம். அதற்குப் பின்னர், புதுக்குடியிருப்பு அகதி முகாமுக்கு வந்து இறுதியாக மன்னாருக்கு வந்து சேர்ந்தோம்.*"
> (KRI பெ 57)

> "*நான் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் எல்லாச் சொத்துக்களையும் இழந்தேன். அதனைத் தொடர்ந்து நாங்கள் மட்டக்களப்பிற்கு இடம் பெயர்ந்தோம். என்னுடைய தொழில் நடவடிக்கைகளை மெதுவாக விருத்தி செய்ய முடிந்தது. அக்கட்டத்தில், என்னை ஒரு விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் என்று நினைத்து படையினரின் உளவுத்துறையினரால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டேன். அவ்விடத்தை விட்டு மன்னாருக்கு இடம் பெயர்ந்துள்ளேன்.*"
> (KRI பெ 55)

> "*மோதலின் காரணமாக நாம் இந்தியாவுக்குச் சென்றோம். இந்தியாவில் 1985முதல் 1989 வரை நாம் அகதி முகாமொன்றில் வாழ்ந்தோம். 1989இல் கடல் வழியாக நாம் மன்னாருக்குத் திரும்பி வந்தோம். 2001இல் இலங்கை கடற்படையினர் எமது கிராமத்தில் உள்ள சில வீடுகளை எரித்ததுடன், சில கிராமவாசிகளும் அவர்களால் கொல்லப்பட்டனர்.*"
> (KRI பெ 37)

தனிப்பட்டவர்களும், சமூகங்களும் அவர்களின் இடப்பெயர்வுக் காலங்களில் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். தனி நபர்களின் அனுபவங்கள் சமூகத்தின் கூட்டு அனுபவங்களாக உருப் பெற்றன. இச்சமூகத்தினரில் பலர் அவர்களின் சென்றகால அனுபவங்களைக் கடந்து சென்றதுடன், தங்களுடைய வாழ்வினை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகின்றது.

### மோதல் அனுபவங்கள் - MSL

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இடங்களில் மிகவும் வசதியற்றவர்களாக MSL சமூகத்தினர் காணப்பட்டனர். இதில் அதிகமான குடும்பங்கள், ஆய்வு மேற்கொண்ட காலத்திற்கு அண்மையான காலப்பகுதியில் மீள குடியமர்த்தப்பட்டனர். இது மற்றைய

நீண்டகால மீள் குடியமர்வுடைய சமூகங்களிலிருந்து வேறுபட்டுள்ளது. அண்மைக்கால மீள் குடியமர்வு அனுபவத்தைக் கொண்ட சமூகத்தவர்களின் தனியான குடும்பங்களின் அனுபவங்கள் சார்பான விடயங்கள் MSL பகுதியினரின் மோதல்கள் தொடர்பான உரையாடல்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

> "*போர்க்காலத்தில் நாங்கள் எங்களுடைய சொத்துக்கள் முழுவதையும் இழந்தோம். கிராமத்தை விட்டு வெளியேறிய பொழுது போட்டிருந்த உடுப்புக்களுடன் வெளியேற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. சிலர் தங்களுடைய கல்வியினைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் அதனைக் கைவிட்டனர். எங்களுடைய சுயகௌரவத்தையும் இழந்தவர்களாக அகதிகள் என அழைக்கப்பட்டுள்ளோம். அரசாங்கத்தினாலும், சமூகத்தினாலும் கவனிக்காமல் விடப்பட்டோம். மீள்குடியமர்வுக்குப் பின்னான தேர்தலில் வாக்களிப்பதற்கான வாய்ப்பும் எங்களுக்கு எட்டவில்லை. இக்கிராமம் தாக்கப்பட்ட நேரங்களில் நாங்கள் இடத்துக்கிடம் மாறிச் சென்றுள்ளோம். எவ்வித உதவியும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. எங்களுக்கு உதவுவதற்கு அமைப்புக்கள் ஒன்றும் முன்வரவில்லை. சர்வதேச இஸ்லாமிய நிவாரண நிறுவனம் (IIRO) ஐந்து வீடுகளைக் கட்டியுள்ளது. எங்களுடைய நிலைமை பற்றி மற்றவர்களுக்குத் தகவல் கொடுப்பதில் நாங்கள் களைப்படைந்துள்ளோம். ஒவ்வொருவரும் எங்களைப் பற்றிய விபரங்களைப் பெறுகின்றனர், ஆனால் அதனால் எங்களுக்க ஒரு பயனும் கிடைப்பதில்லை. புத்தளத்தையும் மற்றும் MSL ஆகியவற்றையும் இணைக்கும் பாதையும் மூடப்பட்டுள்ளது. நகரத்துக்குச் செல்வது கடினமாகின்றது. இப்பாதை திறக்கப்பட்டால் நாங்கள் எங்களுடைய தொழில் முயற்சிகளைச் செய்யலாம். அங்கு செல்வதற்கு இது ஒரு குறுக்கு வழிப்பாதையாக அமைகின்றது.*" (MSL 7 பிரதான தகவலாளி).

> "*எங்களுடைய அரிசி ஆலைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது; அத்துடன் எங்களுக்குத் துணை வருமானம் தருகின்ற மந்தை வளர்ப்பினையும் இழக்க நேரிட்டது. எங்களுடைய வீடுகளும் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டன. எங்களுடைய சுயகௌரவத்தை இழந்தோம்; எங்களுக்கு மக்கள் அகதிகள் எனப் பெயர் சூட்டினர். இடம்பெயர்ந்துள்ள பொழுது நாங்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்கினோம். எங்களுடைய குடும்பம் போருக்கு முன்பாக செழிப்புடன் வாழ்ந்தது. நாங்கள் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்து கடைசியில் 1990 இல் கல்பிட்டியில் குடியமர்ந்தோம். அங்கே 2002ஆம் ஆண்டுவரை வசித்து வந்தோம். அதற்குப் பின்னாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, இங்கு வந்து சேர்ந்தோம். இடப்பெயர்வுக்குப் பின்னர் எங்களுடைய குடும்பத்தின் கல்வி மட்டம் உயர்ந்துள்ளது ஒரேயொரு ஆக்கபூர்வமான மாற்றமாகக் காணப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னரான காலத்தில் மீள் குடியமர்த்தப் பட்டோம். நாங்கள் எங்களுடைய சொந்த நிலத்துக்கு திரும்பி வந்தது மகிழ்ச்சியைத் தந்தது ஆனாலும் இப்பொழுது முன்பைவிட ஒன்றும் நல்லதாக இல்லை. நாங்கள் இன்னும் ஒரு விரும்பத்தகாத நிலையில் இருந்து வருகின்றோம். இன்னும் நாங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் இருக்கின்றோம். அவர்களுக்கு வரி செலுத்த வேண்டிய கட்டாயமும் தொடர்ந்து இருந்து வருகின்றது. எல்லா வீடுகளும் அதிகம் சேதமடைந்துள்ளன; சில வீடுகள் முற்றாக அழிந்து விட்டன. பாதைகளும் சேதமடைந்துள்ளன. எல்லாக் குடும்பங்களும் போருக்குப் பின்னர் இடம் பெயர்ந்தன. தற்பொழுது அவை போர் நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னாக, மெதுவாக மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கின்றன.*"
> (MSL பெ 30).

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்கள் தொடர்பாக அவதூறு கூறும் மனப்பாங்கு இருந்துள்ளதனை சமூகத்தினர் தங்களுடைய அனுபவங்களைப் பற்றிய உரையாடல் மூலம் அறிய முடிகின்றது. அவர்களின் நிலைமையிலிருந்து அதிகமான கசப்பான அனுபவங்கள் மற்றும் வெறுப்புடைய உணர்வுகள் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. இத்தகைய வெறுப்புணர்வுகளும் மற்றும் தாங்கள் அவதூறுக்கு உள்ளாவதும் சமூகங்களிடையே பொதுவாகக் காணப்பட்டுள்ளது. ஆனாலும், இது குறித்து KRI, மற்றும் MSL ஆகியவற்றிடையே வேறுபாடு இருப்பதும் கவனத்துக்குரியது. இவற்றிடையே அனுபவங்கள் ஒத்தவையாக இருப்பினும், KRI சமூகத்தவர் மீட்பு செயல்முறையில் முன்னேற்றமடைந்துள்ளனர்; அவர்கள் தொடர்பாக வெறுப்புணர்வு தணிந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது; மேலும் இவர்களைப் பொறுத்து உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்கள் என்ற பொதுவான 'அவப்பெயர்' மறைந்துவிட்டது அல்லது அது சரியாகக் கையாளப்பட்டுள்ளது. ஆனாலும், MSL சமூகத்தவரிடையே இவ்விடயங்கள் இன்றும் முக்கியத்துவம் கொண்டவையாக இருப்பதுடன் அவை உடனடியான அக்கறையினையும் உண்டு பண்ணியுள்ளன. இவ்விரு சமூகத்தவர்களினதும் அனுபவங்கள் குறித்த வேறுபாடு தொடர்பாக எவ்வாறு காலத்தின் நகர்வு முக்கியத்துவம் கொள்கின்றது என்பதையும், எவ்வாறு காலப்போக்கில் சமூகங்கள் மோதலினால் ஏற்பட்ட விளைவுகளுக்கு முகம் கொடுப்பதும், மாற்றங்களுக்கு ஏற்றவாறு தம்மைத் தயார்படுத்துவதும் சாத்தியமாகின்றன என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

### மோதல் அனுபவங்கள் - NNT

NNT சமூகத்தவர்களின் அனுபவங்கள் பங்கு கொண்ட மற்றைய சமூகத்தவர்களுடன் ஒப்பிடுமிடத்து பாதிப்பினை ஏற்படுத்திய சம்பவங்கள் ஒத்தவையாக அல்லது அநேகம் ஒத்தவையாக இருந்துள்ள பொழுதிலும், வேறுபட்ட தன்மையைக் காட்டியுள்ளன. இச்சமூகத்தினர் ஒத்தவிதமான மோதல் சூழலில் வாழ்ந்துள்ளனர்; நேரடியான மற்றும் மறைமுகமான வன்முறைகளையும் அனுபவித்தனர்; மற்றும் சில குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. பின்னர் இச்சமூகத்தவரிடையே மீள் குடியமர்த்தப்பட்டனர்.

எப்படியாயினும், மோதலின் பாதிப்புத் தன்மையின் அளவு (degree of affectedness) அதிகம் வேறுபட்டு இருந்தது. NTT சமூகத்தவர்களின் மோதல் அனுபவங்களின் உக்கிரத்தன்மை ஆய்வினில் சேர்ந்த மற்றைய இரு சமூகத்தவர்களுடன் ஒப்பிடும்பொழுது குறைந்ததாக இருந்துள்ளது. இதற்குக் காரணமாக இருந்தது, இவர்களிடையே பல குடும்பங்கள் மோதல் காலத்தில் தமது வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்படவில்லை; அல்லது மோதல் சூழ்நிலைகள் அவர்களின் ஜீவனோபாய வாய்ப்புக்களை மற்றைய சமூகத்தவர்களைப் பாதித்தளவுக்குப் பாதிக்கவில்லை.

KRI சமூகத்தவர்கள் போல NTT ஒரு கூடுதலான மீட்புக் காலத்தைக் கொண்டிருந்தது. இதனால் ஒரு உயர்ந்தளவான பாதுகாப்பு உணர்வு மற்றும் நலன் விளைவிக்கும் எண்ணம் ஆகியவை பங்களிப்பைச் செய்ய முடிந்தது. படையினரால் வழங்கப்பட்ட உதவி (கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த பிறிகேடியர் (Brigadier) ஒருவரின் முயற்சியினால் கிடைக்கப் பெற்றது) ஓரளவிற்கு மோதல் பற்றிய அவர்களின் உணர்வு நிலையினை மாற்றியதுடன், கூடுதலான மீட்பு எண்ணப் பாங்கினை வளர்ப்பதிலும் பங்காற்றியது.

> *"1990இல் பிரச்சினை தொடங்கிய பொழுது உயிர்த்த ராசன் குளத்திற்கு, இது எங்களுடைய கிராமத்திற்கு அடுத்ததாக உள்ளது, இடம்பெயர நேரிட்டது. அங்கு எங்களுடைய தேவாலயம் பாதுகாப்பு வழங்கியது. நாங்கள் உள்வாரியாக இடம்பெயர்ந்தவர்களான நிலையினைப் பெற்றோம். அதற்குப் பின்னர் நாங்கள் மடுவுக்குச் (Madhu) சென்றோம். என்னுடைய தந்தையார் சுகயீனமுற்றிருந்த காரணத்தால், நான் ஒரு முறை கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது நான் அங்கு படையினரிடம் அகப்பட்டேன். நாங்கள் இங்கு குடியேற நேரிட்டது. நாங்கள் இதற்கு முன்பு இங்கு வந்திருந்தாலும் அப்பொழுதே குடியேறியிருக்கலாம். மோதல் ஏற்பட்ட நேரத்தில் ஒரு படையினருக்கும் வேறொரு படையினருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. அதனால் நாங்களும் அச்சமடைந்து, மடுவுக்குத் திரும்பவும் செல்ல எண்ணியிருந்தோம். ஆனால் படையினர் இடம் மாறுவதற்கு அனுமதி வழங்கவில்லை. எங்களுக்குப் பாதுகாப்புத் தருவதாக படையினர் கூறி எங்களைப் போக வேண்டாம் எனப் பணித்தனர். பொறுப்பாக இருந்த படை பிறிகேடியர் ஒரு நல்லவராகக் காணப்பட்டார். ஆகவே நாங்கள் குடியமர்வுக்கு உடன்பட்டோம். ஆனாலும் எங்களுடைய பொருள்களை விற்பனை செய்வது தொடர்பாக பிரச்சினைகள் எழுந்தன. நான் சந்தையில் முட்டை வியாபாரம் செய்வது வழக்கம். இது தொடர்பாகச் சரியான போக்கு வரத்து வசதிகள், ஒழுங்குகள் செய்யப்படவில்லை; பேரூந்து சேவைகளும் கிடைக்கவில்லை. படையினர் பொருட்களை மன்னார் நகரச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு பேரூந்தினை வழங்கினார்கள். எங்களுக்கு உணவுத் தட்டுப்பாடு என்பதும் ஏற்படவில்லை. அருந்துவதற்கு எப்பொழுதும் ஏதாவது கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. ஆகவே எங்களுடைய பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளோம். சில காலத்துக்குப் பின்னர் படையினர் எங்களுடைய கிராமங்களை விட்டுச் சென்றனர். அவர்கள் இங்கு இருந்த காலத்தில் எங்களுக்கு உதவி செய்தார்கள்."*
> (NNT ஆ 56)

> *"எங்களைப் பொறுத்தவரை பிரச்சினைகள் 1990இல் ஆரம்பித்தன. மன்னார் NTT, உயிலங்குளம், அடம்பன், தள்ளாடி ஆகிய இடங்கள் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டன. இரண்டு வருடங்களாக இப்பிரதேசங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஆனாலும், 1990 தொடக்கம் 1992வரை எங்களுக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இருக்கவில்லை. படையினரிடமிருந்தும் பிரச்சினைகள் எழவில்லை. குளம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்ததினால் குறிப்பிட்ட பொறியியலாளர்கள் அங்கு வேலைக்குச் செல்லாத காரணத்தினால் தண்ணீர் வழங்குதலும் நிறுத்தப்பட்டது. நாங்கள் எங்கள் தோட்டங்களில் காய்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தோம். அவற்றை மன்னார் நகருக்கு எடுத்துச் சென்றோம். படையினர் எங்களுக்குப் பேரூந்து போக்குவரத்து வசதியினைச் செய்தனர். மோதலினால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்படவில்லை."*
> (NNT 7 ஆ 54)

மோதலில் ஈடுபட்ட ஒரு சாராருடன் சமூகத்தினர் ஏற்படுத்திய உறவுகள் பாதகமான விளைவுகளைத் தணிப்பதில் ஓரளவு காரணமாக இருந்துள்ளன.

மோதலினால் ஏற்படும் பாதிக்கப்பட்ட தன்மை என்பதன் பொதுவான போக்குகள் ஒவ்வொரு ஆய்வுச் சமூகங்களிலும் இனங்கண்டு கொள்ள முடிகின்றது; ஆனால் இப்போக்குகள் உள்ளார்ந்த விதத்தில் இருக்கக் கூடிய சிக்கல்களையும் வேறுபட்ட மட்டங்களில் ஏற்படுகின்ற பாதிக்கப்பட்ட தன்மை பற்றியும் கணக்கெடுப்பதாகத் தெரியவில்லை; இவை தனிப்பட்டவர்கள் மட்டத்தில் மட்டுமே ஆராய்ந்து அறியக் கூடியவை என்பதும் அவதானிக்க முடிகின்றது. மோதல், ஒவ்வொரு சமூகங்களிலும் உள்ள ஒவ்வொரு மக்களையும் வெவ்வேறு விதமாகப் பாதித்துள்ளது. இவ்வாய்வில் எடுக்கப்பட்ட முயற்சி, மோதலின் சில பொதுவான பாதிப்புத் தன்மையின் இயல்புகளை வெளியே கொண்டு வந்துள்ளது; அதேவேளை அவ்விடயம் தொடர்பாக எழுகின்ற தனிப்பட்ட மோதல் அனுபவங்களின் உள்வாரியான சிக்கல் நிலைமைகள், தன்மைகள் என்பவை முக்கியமாகின்றன.

## 6. நீதியும் மீட்பும்

ஒரு குடும்பத்தினரின் சமூக-பொருளாதார நிலை, அவர்களின் நீதி கிடைத்தல் தொடர்பாக விளங்குவதில் பங்களிப்பினைச் செய்வது மற்றும் நீதியை நாடிச் செல்வதில் அது செல்வாக்கினை வகிப்பது என்பவை பற்றி நோக்குவது இவ்வாய்வின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகின்றது. பதிலளிப்பாளர்களை வெவ்வேறு சமூக-பொருளாதார பிரிவுகளாகப் பாகுபடுத்தி இவ்வாய்வில் சமூகங்கள் எவ்வாறு நீதி கிடைத்தல் பற்றிய உணர்வினை வெளிப்படுத்துகின்றன என்பதை நேர்காணல்களில் கிடைத்த தகவல்களைப் பயன்படுத்தி விளக்கப்பட்டுள்ளது. உயர்ந்த சமூக-பொருளாதார நிலை, நடுத்தர மற்றும் கீழ்மட்டப் பொருளாதார நிலைகள் என வேறுபடுத்தப் பட்டுள்ளது. அவ்வடிப்படையில், சமூக-பொருளாதார நிலை சமூகத்தினரின் நீதி கிடைத்தல் மற்றும் மீட்பு நடவடிக்கை ஆகியவை தொடர்பான எண்ணங்கள் மீது செல்வாக்கினை ஏற்படுத்துகின்றது என்ற மையமான கருதுகோளினை சரி, பிழை பார்ப்பது ஆய்வில் பிரதான இடத்தினைப் பெறுகின்றது. வேறுபடுத்தப்பட்ட சமூக-பொருளாதார நிலை ஒரு செயற்கையான பாகுபாடு இவ்வாய்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும், வேறுபட்ட சமூக-பொருளாதார நிலைகளுடனான வீச்சமைவுடன் இல்லத்தினர்/குடும்பங்கள் காணப்படுகின்றனர். இவ்வாய்வில் கண்டறிந்தவற்றிலிருந்து இவ்வீச்சமைவுக்கு குறுக்கேயான பதியப்படும் போக்குகள் என்பவற்றை,

நீதி முறைகள் குறித்த தேர்வுகளையும் அவை தெரிவு செய்யப்பட்டதற்கான காரணங்களையும் எடுத்துக்காட்ட முடிகின்றது. வேறுபடுத்தலினூடாக சமூக-பொருளாதார நிலை மட்டங்களின் வீச்சமைவினை எடுத்துக் காட்டுவதுடன், மற்றும் இல்லத்தினர் நீதி கிடைத்தல் பற்றிய விடயங்கள் பற்றி குறிப்பிட்ட வீச்சின் வெவ்வேறு புள்ளிகளில் இணைந்த தகவல்களை வழங்குவதும் அவதானிக்கப்படுகின்றது.

இந்த ஆய்வு வெளிப்படுத்தியவற்றில் அறியப்பட்டுள்ளது என்னவென்றால், ஒவ்வொரு சமூக-பொருளாதாரப் பிரிவுகளில் உள்ள இல்லத்தினருடைய பதிலளிப்பாளர்கள், நீதி கிடைத்தல் பற்றி வெவ்வேறு விதத்தில் விளங்கிக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது; ஆனாலும் இதில் அவர்களில் ஒருவராவது முறைசார்ந்த நீதிக் கட்டமைப்பு வழிகளை (நீதிமன்ற முறை மற்றும் சிவிலியன் களுக்கான காவல் துறை) நாடிச் செல்லவில்லை என்பது கவனத்திற்குரியது. அதற்குப் பதிலாக, அவர்கள் சொந்த சமூகத்திலிருந்து வளர்ந்த, அல்லது மிக அரிதாக, மிகக் கீழ்மட்டத்திலுள்ள சமூகத்தவர்களுடன் அல்லது அவர்களுக்கு அண்மையாக வாழ்கின்ற அரசாங்க உத்தியோகத்தர் களிடமிருந்து பெறக்கூடிய நீதி முறைகளை நாடிச் செல்வது முக்கியத்துவம் பெற்றுள்ளது. வேறுபட்ட சமூக-பொருளாதார நிலைகளில் உள்ள மக்களினாலும், சமூகங்களினாலும் நீதி பற்றி விளங்கிக் கொள்வது எப்பொழுதும் பாரம்பரியமான முறைசார் சட்டமுறையுடன் தொடர்புடையதல்ல; பதிலாக, பிரச்சினைகளை கிடைக்கின்ற எந்த வழிகளிலும் தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகளுடன் தொடர்பு பட்டுள்ளதாகக் காணப்பட்டுள்ளது. பதிலளிப்பாளர்களிடையே அவர்களின் நிலைக்கு ஏற்றவாறு முன்பு குறிப்பிட்ட முறைகள் கிடைக்கக் கூடியதாக இருந்துள்ள பொழுதிலும், அவற்றைப் பயன்படுத்தாமல் விடுவதும் அவதானிக்க முடிந்தது. இக்கட்டுரையில், சமூகங்களின் தீர்வு முறைகள் முறை சார்ந்தவற்றுக்குப் பதிலாக சமூக அடிப்படையிலான மாற்று வழியிலான தீர்வுகளில் ஆர்வம் காட்டியது எத்தகைய காரணங்களினால் ஏற்படுகின்றது என்பதற்கான சில உறுதிப்பாடான காரணங்களை இக்கட்டுரை விளக்குகின்றது.

### கீழ் மட்ட சமூக-பொருளாதார நிலை

குடும்பங்களை இப்பிரிவில் வகைப்படுத்தியது, பௌதீக சொத்துக்கள் இல்லாமையின் அடிப்படையிலும் அவர்களுடைய சமூக-பொருளாதார நிலைமை பற்றிய அவர்களின் விரிவுரைத்தலைத் தழுவியும் அமைகின்றது. இப்பகுதி, இப்பிரிவில் உள்ள இல்லத்தினர் நீதி கிடைத்தல் பற்றி எத்தகைய எண்ணங்களைக் கொண்டிருந்தனர் என்பதை அறிமுகஞ் செய்கின்றது.

> *"ஒன்றுமறியாத ஒருவருக்கு எதிராக தவறான நடவடிக்கையில் ஈடுபட்டால் அது குற்றம் இழைப்பது எனக் கொள்ளப்படுகின்றது. நாங்கள் எங்களுடைய சொத்துக்களை இழக்க நேரிட்டது; நாங்கள் குற்றமற்றவர்கள். மோதல் காலத்தில் நாங்கள் துயரங்களுக்குள்ளானோம். இன்றும் நாங்கள், வேறொருவருக்கும் தீங்கு செய்யாமலும், துயரம் அனுபவித்துக் கொண்டிருக் கின்றோம். இது என்னுடைய எண்ணப்படி 'குற்றம்' என்றே கருதுகின்றேன்."*
>
> *தற்பொழுது எங்களுக்கு நீதிப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. எவரிடமிருந்தும் நீதியினைத் தேடிப் பெறுவதில் எனக்கு எவ்வித தடையுமில்லை. எனக்கு ஏதாவது ஒரு பிரச்சினை இருக்குமானால், என்னுடைய தாயாரிடம் சென்று அது பற்றிக் கூறுவேன். என்னுடைய தாயார் கிராமத்திலுள்ள வேறு ஆட்களிடம் (நல்ல இரக்கமுடைய, வயதில் முதிர்ந்தவர்கள் மற்றும் எங்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்தவர்கள்) சென்று கதைத்துக் கொள்வார்.*
>
> *KRI இல் குடியமர்ந்த பின்னர் இதுவரை எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை. நாங்கள் அங்கு அமைதியுடன் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல் வாழ்ந்து வருகின்றோம். மற்றவர்களும் அவ்வாறுதான் இருந்து வருகின்றார்கள். எல்லோரும் மோதலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.*
>
> *நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்காதவர்கள். பாதுகாப்பற்றவர்களாக இப்போது வாழ்ந்து வருகின்றோம். ஏதாவது நடந்தால் அதுபற்றி மேலும் தொடர்ந்து எடுத்துச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் எங்களிடம் பணமில்லை, மற்றும் சுயகௌரவமும் இல்லை. நாங்கள் எங்களுடைய எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. இக்கிராமத்தில் வசிக்க வேண்டியுள்ளது. பணமுடையவர் ஒருவர் பிரச்சினை ஒன்றினை எதிர் நோக்கினால் அவர் அதை மேலும் தொடர்ந்து எடுத்துச் செல்வதுடன் மற்றும் நீதிமன்றத்துக்கும் செல்வார்."*
> (KRI பெ 17)

மேலே, நேர்காணலிலிருந்து எடுத்துக் கூறப்பட்டவை பதிலளிப்பாளர்கள் பலரிடமுள்ள எண்ணப் பாங்கினைப் பிரதிபலிக்கின்றது. அவர்கள் கொள்ளும் கருத்து எதுவென்றால், தாங்கள் எந்தவொரு குற்றச் செயல்களையும் புரியாதவர்கள், விரும்பாமல் மோதலுக்குள் இழுக்கப்பட்டுள்ளனர், அதனால் துன்பங்களை அனுபவிக்கின்றனர். நேர்காணல் மேலும் சுட்டிக்காட்டுவது, சமூக-பொருளாதார நிலையானது மக்கள் தங்களுடைய பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான வழி முறைகள் பற்றிய உணர்வினை அதிகரிக்கின்றது. இக்குறிப்பிட்ட விதமாக விளங்கிக் கொள்ளுதல், பதிலளிப்பாளரின் சொந்தக் குடும்பத்தின் நிலை பற்றிய உணர்வின் அதிகமான செல்வாக்கினால் ஏற்படுகின்றது. இது எவ்வாறு 'மற்ற நிலையினர்' நீதியினைப் பெறுகின்றனர் என்பதன் வெளிப்படுத்தலாக அமைகின்றது. உயர்ந்த சமூக-பொருளாதார நிலையிலுள்ள மக்களினால் எதிர் நோக்கப்படும் வேறுபட்ட நிலைமை அவர்களின் உயர்ந்தளவான சமூகச் செல்வாக்குடன் தொடர்புடையது; ஆனால், இதனை மக்கள் முன்மாதிரியாகக் கொள்ள விரும்புவதில்லை அல்லது அதனை அடைவதற்குப் பேரார்வம் உடையவர்களாகவுமில்லை. எவ்வாறாயினும், இவ்வுதாரணம் மற்ற நிலையினரின் உணர்வினை விபரிக்கின்றது. இது வேறுபட்ட சூழ்நிலையில் இன்னொரு வெளிவாரியான வாழ்வு முறையின் கருத்தாக வெளிப்படுகின்றது.

நேர்காணல் முயற்சி மேலும் சில அம்சங்களை வெளிக்கொணர்கின்றது. பிரச்சினைகள் எழுகின்ற பொழுது அவை மேலும் தொடர்ந்து எடுத்துச் செல்லப்படாததற்கான காரணங்களில் ஒன்றாக இருப்பது, சமூகத்திடையே உள்ள சமூக உணர்வினைப் பேணலும் மற்றும் சமூகத்திற்குள்ளே குடும்பங்கள் அதனை ஏற்றுக் கொள்வதும் முக்கியமாகின்றது. சமூகமே அவர்களுடைய ஆதரவு வழங்கும் கட்டமைப்பாகின்றது, ஆதலால் அதனைப் பேணுவதும் தேவைப்படுகின்றது. இதனுடைய விளைவாக சமூகக் கட்டமைப்புகளுக்கு மேலாக முண்டியடித்துக் கொண்டு செல்லுதலும் மற்றும் குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலை அதிகரித்தலும், அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வேறுபட்ட வழிமுறைகள் கிடைக்கலாம்; ஆனால் இது உடனடியாக குடும்பத்தினருக்கு சாத்தியமான வழிகள் குறித்த தாக்கத்தினை ஏற்படுத்தாத ஒரு உணர்ந்துள்ள நிலைமையினைத் தழுவியதான இலட்சியமாகின்றது. இந்த ஆய்விலிருந்து கிடைக்கும் ஆலோசனை, இத்தகைய பிரச்சினைகள் ஒவ்வொரு சமூகத்தினதும் மற்றும் அதற்குள் ஒவ்வொரு இல்லத்தினதும் சூழ்நிலையமைவில் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது தேவைப்படுகின்றது. இச் சூழமைவு சில சாத்தியப் பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றது மற்றும் வேறு சிலவற்றை அனுமதிக்கின்றது.

கீழே தரப்பட்டுள்ள பகுதியின் விபரங்கள் எவ்வாறு இல்லத்தினர் மோதலினால் பாதிக்கப்பட்டனர் என்பதையும், அந்த அனுபவங்கள் எவ்விதமாக அவர்களின் நீதி கிடைத்தல் பற்றிய எண்ணங்கள் மீது செல்வாக்கினை ஏற்படுத்தின என்பதையும் காட்டுகின்றன.

> *"எங்களுடைய வாழ்க்கையின் முதலாவது இடம் திருக்கேதீஸ்வரம். என்னுடைய பெற்றோர் விவசாயிகள். அவர்கள் தங்களுடைய விவசாய வேலைகளைத் நாகதாழ்வில் தொடர்ந்து மேற்கொண்டனர். எங்களுக்கு ஒரு நிரந்தர வீடும் இருந்தது. என்னுடைய தாயாரின் கூற்றுப்படி நாங்கள் 1990இல் இடம்பெயர்ந்தோம். அதனால் இந்தியாவுக்குச் சென்றோம். பழனி என்ற இடத்தில் வசித்தோம். நாங்கள் ஒரு முகாமில் இருந்துள்ளோம். என்னுடைய தந்தையார் இடம்பெயர்வுக்குப் பின்னர் குடிப்பழக்கத்தில் அதிகம் ஈடுபட்டிருந்தார். இதனால் எனது தந்தை, தாயார் ஆகியோரிடையே பிணக்குகள் அதிகரித்தன. குடும்பத்தில் அமைதி இல்லாமல் போய்விட்டது. 1992இல் நாங்கள் இந்தியாவிலிருந்து திரும்பினோம். இடம்பெயர்ந்தோருக்கான பணக்கொடுப்பனவு மட்டும் கிடைத்தது. எனது தந்தையாருக்கு நிரந்தர வருமானம் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அரசாங்க உலர் உணவு கிடைத்ததாக தாயார் கூறினார். எங்களுக்கு மலசலகூட வசதிகள் இருக்கவில்லை, தண்ணீர் வசதியும் கிடைக்கவில்லை. எனது தாயார் பல கஷ்டங்களின் மத்தியில் துயரங்களை அனுபவித்தார். எனது தந்தையாருடைய நடத்தை தாயாரைத் தற்கொலை முயற்சிக்குத் தூண்டியது. ஒரு தடவை, தாழ்ந்த மனநிலையில் இருந்ததனால் அவர் நஞ்சருந்தினார். சென்றகால சம்பவங்களினால் ஏற்பட்ட பாதிப்பு அவர் மீது உளரீதியாகப் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது."*
> (KRI பெ 17)

போர் நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர், நேரடியான வன்முறையும் இல்லாததனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'எத்தகைய பிரச்சினைகளும்' இல்லை என்ற கருத்து பல நேர்காணல்களில் வெளிப்படுத்தப்பட்டது. ஆய்வில் பங்கெடுத்த சமூகத்தினர் அவர்களுடைய வரலாற்று ரீதியான அனுபவங்கள், அவர்கள் பெற முடிந்த நீதிமுறை என்பதற்கு அப்பாற்பட்டதாக இருந்துள்ளதாகக் கூறியுள்ளனர். இது ஒரு பொதுவான போக்காக, சமூக-பொருளாதார வேறுபாடுகளைக் கணக்கெடுக்காத நேரத்தில், சமூகங்களின் நேர்காணல்களிலிருந்து வெளிவந்துள்ளது.

இவ்வாய்விலிருந்து தெரியவருவது, சமூகம் கூட்டாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது ஒரு பலமான உணர்வாக அமைந்துள்ளது. இதனை எடுத்துக்காட்டுவதாக, "மற்றவர்களும் ஒரே நிலையில் இருப்பது", மற்றும் "எல்லோரும் மோதலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்" ஆகிய கூற்றுக்கள் முக்கியமாக வெளிவந்துள்ளன. ஆய்வினில் பங்கெடுத்த எல்லாப் பாதிக்கப்பட்ட சமூகங்களும் செய்த பங்களிப்பில் கூட்டான அனுபவங்கள் என்பவற்றை வலியுறுத்தியுள்ளதுடன், அவற்றை எதிர் கொள்வதிலும் கூட்டான நிலைப்பாட்டுடன் தொழிற்பட்டனர். சமூகத்தினைத் தழுவிப் பின்பற்றிய நீதிமுறைகள் இதனைப் பிரதிபலித்துள்ளன.

> *"நீதி என்பது எல்லோருக்கும் சமமானது; நாங்கள் நீதி பற்றி உணர்ந்து கொள்வதனை விளங்கிக் கொள்ளலும் முக்கியமாகின்றது. நாங்கள் எல்லா சமயங்களையும், இனங்களையும் மதித்து நடந்து கொள்ளுதல் வேண்டும். நாங்கள் எந்தவிதமான பாரதூரமான நீதி சம்பந்தமான பிரச்சினைகளையும் எதிர் நோக்கவில்லை. எங்களுடைய முக்கிய பிரச்சினையானது எம்மை முன்னேற்றுவதற்கு பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல். சில சமயங்களில், நாங்கள் கிராம சேவகர்களிடம் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சென்றுள்ளோம். எங்களுடைய பிரச்சினைகள் பற்றிக் கேட்பதற்கு ஒருவருமில்லை."*
> (KRI ஆ 50)

இவ்வாய்வு குறித்துக் கவனிக்கப்பட வேண்டிய விடயம், பதிலளிப்பாளர்களினால் நீதி மற்றும் நீதி தொடர்பான பிரச்சினைகள் பொருளாதார விடயங்களிலிருந்து புறம்பானவையாக நோக்கப்பட்டுள்ளன. இந்தச் சமூக-பொருளாதார பிரிவில் மக்களினால் எதிர்நோக்கப்படும் 'பிரச்சினை' குறிப்பாக அவர்களின் ஜீவனோபாயத் தொழில் வசதிகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் நாளாந்தம் பிழைத்துக் கொள்ளுதல் என்பவை முக்கியமாகின்றன. இதிலிருந்து அறியக்கூடியது என்னவென்றால், ஒரு பரந்த முழுமையான கருத்தில் சமூக-பொருளாதார மீட்பு, மீட்புச் செயன்முறையில் உள்ளிணைந்த விதத்தில் பங்களிப்பைச் செய்கின்றது; இது சிலவேளைகளில், நீதி தொடர்பான விடயம், சென்றகால அனுபவங்களைப் பார்க்கும்பொழுது, ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் குறைந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

“நாங்கள் எந்தவொரு விடயத்தையும் பெரிதாக்கிக் காட்ட விரும்பவில்லை. எங்களுடைய வாழ்வில் நாங்கள் அதிகம் துன்பங்களை அனுபவித்துள்ளோம். ஆகவே அவற்றை எங்களுக்குள்ளேயே தீர்வு காண விரும்புகின்றோம். அது இல்லாவிடில், அதனை நாங்கள் தாங்கிக் கொள்கின்றோம். இப்பொழுது எங்களுக்குப் பாரதூரமான பிரச்சினை ஒன்றுமில்லை. அதனால் நாங்கள் அமைதியாக வாழ்கின்றோம். பாரதூரமான பிரச்சினைகள் எழுந்தால் ‘பெடியன்களிடம்’ சென்று அதுபற்றிக் கூறுகின்றோம். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்வார்கள். அதற்கு மேலாக நாங்கள் செல்வதில்லை. நாங்கள் காவல்துறையிடம் அல்லது நீதிமன்றத்திற்குச் செல்வதை விரும்பவில்லை.”
(MSL பெ 32)

மேற்கோள் காட்டிய பகுதிகள் இரண்டிலும் கவனிக்கக்கூடிய இன்னொரு பிரதான அம்சம், மக்கள் தங்களுடைய பிரச்சினைகளை மிகக் குறைந்த மட்டத்திலான சமூகத்திற்குள்ளே வேலை செய்யும் அரசாங்கப் பிரதிநிதியான கிராம சேவகர் அல்லது ‘பெடியன்கள்’ ஆகியோரிடம் எடுத்துச் செல்கின்றனர், நீதிமன்றமும் மற்றும் காவல்துறையும் இதில் சேர்க்கப்படுவதில்லை.

*“எனக்கு எதனைச் சொல்வது என்பது தெரியவில்லை, ஆனால் நான் என் வாழ்க்கையில் அதிகம் துன்பங்களை அனுபவித்துள்ளேன். எங்களுடைய பிள்ளைகளுடன் இடத்துக்கிடம் ஓடிச் சென்றிருந்தோம். எனது கணவன் எங்களுடைய சாப்பாட்டுக்கு ஒன்றும் கொண்டு வந்து கொடுக்க முடியவில்லை. நாங்கள் எதற்காகத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது என்பது தெரியவில்லை. நாங்கள் ஒருவருக்கும் தீங்கிழைக்கவில்லை. இவையெல்லாம் குற்றச் செயல்களாகின்றன. இக்கிராமத்தில் ஒருவரும் இன்னொருவருக்குத் தீங்கு செய்வதில்லை. பகலில் ஆண்கள் எல்லோரும் வேலை செய்வதற்காகச் சென்று விடுவார்கள்; அவர்கள் மாலை நேரம் அல்லது இரவுதான் வீடு வந்து சேர்வார்கள். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றனர். இதுதான் (சுட்டிக்காட்டி) எங்களுடைய வழிபாட்டுத் தலம். அதற்கு முன் பக்கமாக நாங்கள் எல்லோரும் வாழ்ந்து வருகின்றோம். எங்களுடைய முதியவர்கள், லெப்பெய்கள் எங்களுடன் இருக்கின்றார்கள். ஆகவே எங்களுக்குப் பாரதூரமான பிரச்சினைகள் இல்லை. தற்பொழுது எங்கள் மத்தியில் ஒரு கிராமிய அபிவிருத்திக் குழுவும் இயங்கி வருகின்றது. எங்களுக்குப் பிரச்சினைகள் இருந்தால் லப்பெய்களுக்கு எடுத்துக் கூறப்படும். அவர்கள் எங்களுடைய பிரச்சினைகளை குழுவில் ஆராய்வார்கள். எங்கள் மத்தியில் ஒரு சிறியளவான குடும்பங்கள் மட்டும் வாழ்கின்றன. ஒவ்வொருவரும் எங்களுக்குத் தேவைப்படுபவர்கள். குற்றச் செயல்களும் எங்களிடையே இல்லை. குடும்பப் பிணக்குகளும் குறைவாக உள்ளன. நாங்கள் ‘குர்-ஆனிற்கு’ அமைய வாழ்கின்றோம். நாங்கள் சுயகட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றோம். குர்-ஆனின் வழிகாட்டலில் நடந்து கொள்கின்றோம். அது அமைதி, ஒத்திசைவு ஆகியவை பற்றிப் போதிக்கின்றது. எங்களுடைய சமயத்தில், நாங்கள் அதிகளவிலான நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். சிறு பிரச்சினைகள் இருப்பின் அவை பள்ளிவாசலில், இரு சாராரும் மற்றும் கிராமத்தவர்களும் அழைக்கப்பட்டுத் தீர்க்கப்படுவதுண்டு. செல்வந்தர்கள் எதற்கும் பணத்தைச் செலவளிக்கும் ஆற்றல் கொண்டவர்கள்; பெரிய இடங்களுக்குச் செல்பவர்கள்; அவர்கள் நீதிமன்றங்களுக்கும் செல்ல முடியும்.”*
(MSL பெ 39)

சென்றகால அனுபவங்கள் குற்றச் செயல்களாகக் கருதப்பட்டிருப்பினும், அவை தொடர்பாகக் குறை தீர்த்தல் அல்லது நீதி கிடைத்தல் விடயம் வெளிக்கொணரப்படவில்லை. பதிலளிப்பாளர்கள் எப்பொழுதும் நிகழ்கால நிலைகள், பிரச்சினைகள் மீது கவனத்தைச் செலுத்துகின்றனர். அவ்வாறு செய்யுமிடத்து, சென்றகால நிலைமைகள் குறித்துக் கவனம் செலுத்துவது பிரயோசனமற்றதாகக் கருதுகின்றனர். ஏனென்றால், அவை மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன; அந்த நிலையிலிருந்து வெளியே வந்துவிட்டனர் அல்லது அவை பற்றி வேறுவிதத்தில் குறை தீர்ப்புப் பற்றி நம்பிக்கையில்லை என்ற காரணங்களினால் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

பரஸ்பர தேவை ஒவ்வொருவருக்கும் இருப்பதால், அதன் அடிப்படையில் சமூக உணர்வாற்றல் காணப்படுவதுடன் அது பிணக்குகள் தீர்க்கப்படுவதன் மீது செல்வாக்கினைச் செலுத்துகின்றது. முக்கியமாக அவதானிக்கக் கூடியது, சமூகத்தின் சொந்தமான அடையாளத்திலிருந்து எழுகின்ற கட்டமைப்பினைப் பயன்படுத்திய பிணக்குத் தீர்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு கட்டமைப்பு ஏற்கனவே அதிகளவுக்கு நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைத்தன்மை ஆகியவற்றைத் தருவதுடன், அவை சமூகத்தின் உள்ளார்ந்த வாழ்க்கை அமைவுக்கும் காரணமாக உள்ளன. இதனால், இக்கட்டமைப்பு சமூகத்துடன் இணைந்து இருப்பதுடன், மோதலின் அதேவிதமான அனுபவங்களினால் பாதிக்கப்படுகின்றது. இக்காரணிகள் ஒன்று சேர்ந்து நீதி கிடைப்பது பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக சமூகம் சார்பான தீர்வினைக் கொண்டுவர முடிகின்றது. நேர்காணலில் ஒரு பலமான அநீதி சம்பந்தமான உணர்வாற்றல் தெரிய வந்துள்ளது; மக்கள் தாங்கள் ஒரு தவறும் செய்யாதவர்கள், குற்றம் இழைக்காதவர்கள் என்று நினைப்பவர்கள்; ஆனால் அவ்வாறு இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். அவர்கள் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதும் மற்றும் அவர்களுடைய வாழ்க்கையினையும், ஜீவனோபாய தொழில் வசதிகளையும் நிறுவப்படுவதற்கான வாய்ப்புக்கள் போதியளவு இருக்கவில்லை; அத்துடன் தற்பொழுது பல துயரங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருவது அவர்களுடைய அநீதி பற்றிய உணர்வுக்குப் பலமூட்ட முடிகின்றது.

**நடுத்தர சமூக-பொருளாதார நிலை**

இல்லத்தினர் அல்லது குடும்பத்தினர் இப்பிரிவில் சேர்க்கப்படுவது, அவர்களுக்கு ஒரு உறுதியான வருமான மூலம் மற்றும் ஓரளவு பொருளாதார சொத்துக்களுக்கு உடைமை மற்றும் பதிலளிப்பாளர்களின் சொந்தப் பாகுபடுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. அவர்களுடைய நீதி பற்றிய எண்ணங்களும், ஒரு சமூகத்தினைத் தழுவியிருக்கும் ஒரு பலமான உணர்வாற்றல் மற்றும் சமூக நோக்கில் பிரச்சினைகளை அணுகுவது ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன.

> "*மன்னார் அமைதியாக இல்லை. 1983 இனக்கலவரங்களுக்குப் பின்னர் எங்களுக்கும் பிரச்சினைகள் எழுந்தன. நான் ஒரு நாள் நகரம் சென்றிருந்தேன். அங்கு ஒரு சிறுவன் சுடப்பட்டதைக் கண்டேன். இதுவே எனது இத்தகைய முதலாவது அனுபவம். என்னுடைய கணவர் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டு ஒரு நாள் தடுத்து வைக்கப்பட்டார். அடுத்த நாள் அவர் விடுவிக்கப்பட்டார். எங்களுடைய குடும்பத்தில் அல்லது எங்களுக்குத் தெரிந்தவர்கள் ஒருவரும் இறக்கவில்லை.*
>
> *நாங்கள் ஒரு பயமுள்ள நிலையில் வாழ வேண்டியிருந்தது. அடுத்த நேரம் என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் இருந்தோம். நாங்கள் இந்தியாவிற்குச் சென்ற பின்னர், எங்களுடைய வீடு முழுவதும் தகர்க்கப்பட்டது. வெறும் நிலம் மட்டும் எஞ்சியிருந்தது. என்னுடைய கணவர் மீன்பிடித் தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற்றவர். பின்னர் அவர் எல்லா மீன்பிடி உபகரணங்களையும் இழந்தார். இவ்வுலகத்தில் எத்தனையோ குற்றச் செயல்கள் நடக்கின்றன. என்னைப் பொறுத்தவரை, வேறொருவரின் வாழ்க்கையினை ஒருவர் குழப்பினால், எவராவது செய்யக்கூடாத ஒன்றைச் செய்தால் அல்லது தவறான செயலைப் புரிந்தால் அது ஒரு குற்றமிழைக்கும் செயலாகின்றது.*
>
> *வழமையாக நாங்கள் நீதிமன்றத்திற்கோ அல்லது காவல்துறையினரிடமோ எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் செல்லுவதில்லை. மற்றையது, எங்களுக்கு நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான பெரிய பிரச்சினைகளும் இல்லை. எங்களுக்குச் சிறிய பிரச்சினைகள்தான் இருக்கின்றன. நாங்கள், கிராமிய மட்டத்திலான குழு இயங்கி வருவதனால் அதனிடம் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறுவதற்குச் செல்கின்றோம். அங்கு சென்று எங்களுடைய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடலாம். செல்வந்தர்களும் மற்றும் அதிகாரம் வகிப்பவர்களும் பிரச்சினைகள் தொடர்பாக எல்லா வசதிகளும் அவர்களிடம் இருப்பதனால் பயமின்றி நடவடிக்கைகளை மேற் கொள்ள முடிகின்றது.*"
>
> (KRI பெ 43)

பதிலளிப்பாளர்கள், நீதி என்பதை மோதலின் பாதிப்புத் தன்மை என்பதன் அடிப்படையில் நோக்கியுள்ளனர். இங்கு வலியுறுத்த வேண்டியது, ஆய்வினில் பங்கு கொண்ட எல்லாச் சமூகங்களுக்கும் மோதல் போக்குகள் நியாயமான அளவுக்கு ஒத்தவையாக இருந்துள்ளன; அவைகளிடையே ஏற்படக்கூடிய வேறுபாடுகள் நீதி பற்றி உணரப்பட்டதில் முக்கியமான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை.

இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு மூலாதாரமாக கிராமிய மட்டத்திலான குழுக்கள் தொழிற் படுதல், மற்றும் நீதி தொடர்பாக எழுகின்ற 'பிரச்சினைகளின்' தேவைகள் குறித்துக் குறை தீர்த்தல் முறையினை நாடிப் பலர் செல்வதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

> "*இக்கிராமம் ஒற்றுமையுடன் இருந்து வருகின்றது. எங்களிடத்தே பிரச்சினைகள் இல்லை. ஓரிரு முஸ்லிம் குடும்பங்களை காணப்படுகின்றன. நாங்கள் எல்லோரும் தமிழர்கள்; அநேகமானவர்கள் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், ஒருவருக்கொருவர் சொந்தமானவர்கள். எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் கிராமியக் குழு அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னராக, மக்கள் தங்களுடைய குறைகளை எல்.ரி.ரி.ஈ யினரிடம் எடுத்துக் கூறுவது வழக்கமாக இருந்துள்ளது. அவர்கள் தீர்வுகளை வழங்கினர். மக்கள் அவற்றை ஏற்றுக் கொண்டனர். எல்.ரி.ரி.ஈயினர் 'மக்கள் சபை', 'இணக்க சபை' என்ற குழுக்களை அமைத்துள்ளனர். இன்று கிராமியக் குழுவிடம் எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் செல்லுகின்றோம். அவர்கள் தீர்ப்பு வழங்குவதற்கு ஆறு மாதங்கள் எடுக்கின்றது. மேலும் பிரஜைகள் குழு ஒன்றும் இயங்கி வருகின்றது. இதனிடம் மனித உரிமை மீறல் சம்பந்தமான பிரச்சினைகள் அல்லது ஆட்கள் காணாமல் போகுதல் தொடர்பான பிரச்சினைகள் அல்லது பாரிய குற்றச் செயல்கள் குறித்த விடயங்கள் ஆகியவை சமர்ப்பிக்கப்படலாம். அவர்கள் முதலில் தங்களுடைய வழமையான கூட்டங்களில் இவற்றை எடுப்பார்கள். பாரதூரமான விடயமாக இருந்தால் மன்னார் ஆயர் இராயப்பு யோசெப்பிடம் எடுத்துச் செல்லப்படும். அதற்குப் பின்னர் அவர் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிப்பார். தேவையானால் அவர் பாராளுமன்ற உறுப்பினருடனும் கதைத்துக் கொள்வார். சட்டவிரோதமாக ஒருவர் தடுத்து வைக்கப்பட்ட விடயமானால், ஆயர் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிடுவார். 1990க்கு முன்னராக அப்படியான எங்கள் கிராமத்திலுள்ள ஒருவருக்கு உதவி செய்துள்ளார். அவருக்கு, இது தொடர்பாக ஒருவர் காணாமல் போய்விட்டதாக குடும்பத்தாரின் முறைப்பாடு கிடைத்தது. அது தொடர்பாக இராயப்பு யோசெப் இரண்டு வருடங்களாகத் தேடியுள்ளார். இறுதியாக அவர் கிடைக்கப் பெற்றார்.*"
>
> (NNT ஆ 56)

சமூகங்களின் சொந்த அடையாளம் மற்றும் நிலைமைகள் ஆகியவை நீதி தொடர்பான விடயங்கள் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான உள்ளமைவுக் கட்டமைப்பை நிர்ணயிக்கப்படுகின்றன. இக்கட்டமைப்புக்கள் இயக்கப் பண்புடையவை மற்றும் பிரதேசத்தில் மாறிச் செல்லுகின்ற அதிகார நிலைகள் மற்றும் செல்வாக்கு மட்டங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. இது தொடர்பாக சமூகத்தைத் தழுவிய சமய இணக்க முறைகள் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகின்றன. MSL சமூகத்தில் இது பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் சமயத் தலைவர்கள் சேர்ந்து அமைக்கப்பட்டுள்ளது. NTT இல் இது

கத்தோலிக்கத் தேவாலயத்தினூடாக அமைக்கப்பட்டது. இங்கு கவனிக்க வேண்டிய விடயம், இத்தகைய கட்டமைப்புக்கள் மோதலில் பங்குகொண்ட மற்றும் சமூகத்தவர்களுக்குத் துன்பங்களை ஏற்படுத்திய அரசியல், அரசாங்க அல்லது படைசார்ந்த கட்டமைப்புக்களை விட சமூகங்களிடையே அதிகளவுக்கு முறைமை வாய்ந்த தன்மை, ஏற்புடைத் தன்மை என்பவற்றைக் கொண்டவையாக இருந்துள்ளன.

> *"தற்பொழுது உள்ளூர் தேவாலயத்தின் அருள் தந்தை தலைமை தாங்குகின்ற கிராம மட்டத்திலான குழு இயங்கி வருகின்றது. எங்களுடைய தனிப்பட்ட விடயம் எதுவானாலும் அவரிடம் எடுத்துக் கூற முடிகின்றது. அது தொடர்பாக விசாரித்த பின்னர் குழு தீர்மானத்தை எடுக்கின்றது. அத்தகைய தீர்மானம் அதிகார பூர்வமாகப் பலம் வாய்ந்தது. நாங்கள் எல்லோரும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அதற்குப் பணிந்து நடக்கின்றோம். நான் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருக்கின்றேன். இக்கிராமத்தில் 20 இந்து சமயக் குடும்பங்கள் உள்ளன. அவர்களும் தங்களுடைய பிரச்சினைகள் குறித்துத் தீர்வுகளை இக்குழுவினூடாகப் பெறுகின்றனர். அவர்களும் எங்களுடைய பாதிரியார்/தந்தை மீது நம்பிக்கை கொண்டவர்கள்."*
> (NNT ஆ 54)

இது சமூகம் சார்பான நீதி பற்றிய இன்னொரு அம்சத்தினை வலியுறுத்துகின்றது. ஒரு சமூகத்தின் பெரும்பான்மையினரின் அடையாளத்தின் மேலாதிக்கத்தினைத் தழுவிய ஒரு அமைப்பினை மற்றைய உறுப்பினர்களும் - பெரும்பான்மை சமூகத்தவர்களின் மதத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாவிடினும் - பயன்படுத்த முடிகின்றது. இதிலிருந்து அறிய முடிவது என்னவென்றால், சமூகம் சார்பான முறைமைகள் அடையாளங்களைத் தழுவிய அடிப்படையில் பிரிவு நிலைகளை ஏற்படுத்துவதில்லை. இது மோதலைத் தூண்டுகின்ற விதத்தில் அடையாளப்படுத்தலைப் பயன்படுத்தும் சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தச் செயன்முறையில், சமூகத்தின் உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ளுதலும் அவர்கள் இந்த முறையினை ஏற்றுக் கொள்ளுதலும் ஒரு ஆக்கபூர்வமாகச் சமூக உறவுகளை வளர்ப்பதற்கு வழிகோலுகின்றது. சிறியளவில் இது 'மற்றைய நிலையிலான' மோதலுக்குத் தூபமிடும் எண்ணங்களுக்குச் சவாலாக அமைவதுடன், சமூகங்களில் இருப்பவர்களுக்கிடையே கூட்டுணர்வு என்பதைப் பலப்படுத்தி, தங்களுடைய வாழ்வினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவியாகவும் உள்ளது.

### உயர்ந்த சமூக-பொருளாதார நிலை

இப்பிரிவில் சேரும் இல்லத்தினர் ஒன்றுக்கு மேலான உறுதியான, நிரந்தர வருமானம் பெறும் மூலாதாரத்தைக் கொண்டவர்கள் என்பதுடன் மற்றைய ஒவ்வொரு சமூக-பொருளாதாரப் பிரிவினரையும் விட கூடுதலான சொத்துக்களுக்கு உடைமையானவர்கள். இப்பிரிவில் உள்ள சில பதிலளிப்பாளர்களின் நீதி பற்றிய கருத்துக்கள் சமூகம் சார்பான தீர்வுகள் தொடர்பாக வேறுபட்ட நோக்கினைத் தருகின்றன.

> *"இச்சமூகத்தில் வாழும் மக்கள் கூட்டத்தினர் கல்வியறிவில்லாதவர்கள்; அவர்கள் குற்றமற்றவர்கள்; பிரச்சினைகளைப் பெரிதாக்கிப் பார்ப்பதில்லை. தங்களுக்கிடையே பிரச்சினைகளைத் தீர்க்கும் இயல்புடையவர்கள். நாங்களும் அப்படிப்பட்ட அனுபவத்துடன் பழக்கப்பட்டவர்கள். மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளியே எடுத்துச் சென்றால் அது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் அவப்பெயரை உண்டுபண்ணலாம். நாங்கள் பிரச்சினைகளை எங்களுடைய பாதிரிமார்களிடம் (தேவாலயம்) எடுத்துச் செல்கின்றோம். ஆயர் இராயப்பு ஜோசெப் இம் மாவட்டத்தின் உயர்ந்த மட்டத்தில் வைத்து மதிக்கப்படுபவர். எங்களுடைய பாதிரிமார்கள் அவருடைய வழிகாட்டலில் பணிபுரிபவர்கள். இது ஒரு மாற்று வழியாகக் கருதப்படுகின்றது; ஏனென்றால் சில விடயங்கள் குடும்ப இரகசியங்களை உள்ளடக்குகின்றன. அவற்றை நாங்கள் நீதிமன்றத்திற்கு அல்லது வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. அப்படிச் செய்தால் குடும்பத்தைப் பற்றிக் கெட்ட பெயர் ஏற்படும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு, கணவன் மனைவி ஆகியோரிடையே உள்ள தகராறைத் தீர்ப்பதற்கு நாங்கள் தந்தை (ஆயர்) அவர்களிடம் செல்கின்றோம். அவர் குடும்ப ஆலோசனை வழங்குபவர். நீதிமன்றத்திற்கு இதனை எடுத்துச் சென்றால் அது வெளியுலகத்திற்குச் செல்கின்றது.*
>
> *நீதி என்பது, கல்வி கற்ற ஒருவர் கல்வியறிவில்லாத ஒருவர், செல்வந்தர், வறியவர், பண்பாடுடையவர், பண்பாடில்லாதவர் ஆகியோரிடையே வெவ்வேறு விதத்தில் விளங்கிக் கொள்ளப்படலாம்."*
> (KRI பெ 51)

இவ்வாறாக வேறுபட்ட விதத்தில் பார்ப்பது, சமூகங்கள் எவ்வாறு தங்களுடைய பிரச்சினைகளை சமூகத்திற்குள்ளே வைத்துக் கையாளுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இவ்வகையாக நடந்து கொள்வது, மற்றைய பதிலிறுப்புகளிலிருந்து எவ்வாறு சமூகங்கள் வேறுபட்ட விதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக அணுகியுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வகையில் வேறுபட்ட பதில்கள் கிடைப்பதனால் வெவ்வேறு தெரிவு செய்யும் நிலை இருப்பதாகக் கருதுவதும் சரியல்ல; இரு மாற்று நிலைகளை ஒன்றுடனொன்று ஒப்பிடும் ஒரு வாய்ப்பாக இல்லாமல், நிலைமைக்கு ஏற்றவாறு மிகப் பொருத்தமானதை ஏற்றுக் கொள்ளுதல் என்ற நிலைப்பாடாகின்றது. இப்பின்னணியில், சமூகத்தையும் சமயத்தையும் தழுவிய முறைமைகளின் அடிப்படையில் மக்கள் தம்முடைய பிரச்சினைகள் குறித்துத் தெரிவு நிலையினைப் பயன்படுத்துவது அவற்றை விட வேறு நல்ல வழிமுறைகள் தெரியாததனால் பயன்படுத்துகின்றனரா அல்லது வேறு விதமான நடுவர் தீர்வு முறை தொடர்பான வாய்ப்புக்களை கல்வியறிவின் போதாமையினால் பயன்படுத்தாது விடுகின்றனரா என்ற கேள்விகள் எழுகின்றன. மேலும் வெளிப்படுத்தப்படுவது, வறிய நிலையில் உள்ள சமூகத்தினர், நீதி பற்றிய தேடுதலில் அவர்களுடைய சொந்தமான கட்டமைப்புக்களுக்கு மேலே செல்வதற்குத் தேவையான சமூக வலையமைப்புக்கள் இல்லாதுள்ளனர்.

மேலே குறிப்பிட்டவை தொடர்பாக, அரசாங்க சார்பான நடுவர் தீர்வு மற்றும் பிணக்குத் தீர்வை முறைமைகள் ஆகியவற்றை மக்கள் விரும்பாமலிருப்பதற்கான சமூக ரீதியான காரணங்களும் விளக்கப்படுகின்றன. அதிகளவுக்குத் தனிப்பட்ட பிரச்சினைகள்

மற்றவர்களினால் அறிய வருவது, விருப்பமில்லாத காரணத்தினால் சமூகத்தைத் தழுவிய நீதி பெறும் முறைமைகள் எழுந்துள்ளதனையும், அவை தொடர்ந்து பயன்படுத்தப்படுவதும் அறிந்து கொள்ள முடிகின்றது.
மேலே மேற்கோளாகத் தரப்பட்ட பகுதியில் கவனிக்கத்தக்க ஒரு விடயம் குடும்ப நிலை அந்தஸ்த்து அல்லது அநீதி குறித்து இப்பிரிவினரிடையே ஒரு முக்கியமான அம்சமாக இடம்பெறுகின்றது. மற்றைய சமூக-பொருளாதாரப் பிரிவுகள் 'குற்றச் செயல்' என்பது தங்களுடைய தனிப்பட்ட மற்றும் குடும்பப் பிரிவுகளுக்கு வெளியானவை எனக் கண்டுள்ளனர். ஆனால் மிக உயர்ந்தளவான சமூக-பொருளாதார மட்டம் அதனை வேறுவிதத்தில் கண்டுள்ளது; இவர்களைப் பொறுத்தவரை, தங்களுடைய சமூக-பொருளாதார நிலை பேணப்படுதல் பொருத்தமான நீதி முறைகளைத் தேடுதலில் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

மேலே பிரித்தெடுத்துக் காட்டப்பட்ட பகுதியின் இறுதிப் பிரிவு முக்கியமாகின்றது. காரணம், அதில் கல்வி மற்றும் பண்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் அவை எவ்வாறு நீதி தேடுதல் சார்ந்த எண்ணங்களில் செல்வாக்கினை உண்டு பண்ணுகின்றது என்பதும் கூறப்பட்டுள்ளது. 'பண்பாடு' என்பது மற்றவர்களுடன் தொடர்பு, சமூகத்திற்கு வெளியே உள்ளவை பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மற்றும் சமூக நியமங்கள் மற்றும் நிலைமைகள் பற்றித் தெரிந்திருத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. அத்துடன் சில பாரம்பரிய சமூக நியமங்கள் மற்றும் அவற்றைக் கடைப்பிடித்தல் என்பவையும் சேருகின்றன. பண்பாடு பற்றி இங்கு கூறுமிடத்து, அதனுடைய நோக்கமாக ஒரு சமூக வேறுபாட்டுத் தன்மை என்பதைக் காட்டுவதுடன் மற்றும் ஒரு பல்மட்ட நிலையினையும் அறிமுகப்படுத்துகின்றது. இது நீதி பற்றிய விளக்கங்களுடன் ஒத்துச் செல்பவையாக உள்ளது. உயர்ந்த சமூக-பொருளாதாரப் பிரிவில் உள்ள உறுப்பினர் அவருடைய சமூகத்திலான நிலையினை வலியுறுத்திக் காட்டுவதும் அதனூடாக ஒரு உள்ளார்ந்த விதமான அடுக்கமைவு உணர்வினை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இவற்றிலிருந்து அறிமுகஞ் செய்யப்படும் கருத்து என்னவென்றால், இச்சமூகங்களில் உள்ள மக்கள் சமூகத்தில் உள்ள மற்றவர்களுடன் கூடுதலான தொடர்புகள் வைத்திருப்பின், அவர்கள் வேறுவிதமான நீதி முறைகள், குறை தீர்ப்பு வழிகள் ஆகியவற்றைத் தேடிச் சென்றிருப்பார்கள். இக்கருத்தானது ஒரு புதிய மாற்று நோக்கினைத் தருகின்றது. அதாவது சமூகத்தினர் தங்களுடைய நிலைமைகளை மீள்பரிசீலனை செய்து மற்றும் தாங்கள் அனுபவித்துள்ளவை தொடர்பான அடிப்படையில் நீதி குறித்து எடுக்கும் புதிய வகையான முயற்சி கவனத்திற்கு வருகின்றது. சமூகங்கள் சொந்தச் செயன்முறை வழியான மீட்பு முயற்சிகளில் ஈடுபடுதல், இவற்றைத் தங்களுடைய கல்வி மட்டங்களுக்கு ஏற்றதாக வடிவமைத்தல், மற்றும் அவர்களின் வலையமைப்புக்களின் செல்வாக்குக்கு உட்படுதல் மற்றும் அவர்கள் மதிப்புக் கொடுக்கும் கட்டமைப்புக்களைத் தழுவி அமைதல் ஆகியவை முக்கியமாகின்றன.

மேலே பிரித்தெடுத்துக் காட்டிய பகுதியில் முக்கிய கவனத்தை எடுத்தது என்னவென்றால், பதிலளிப்பாளர் வழங்கும் குறிப்புரையில் அவர் தன்னையும் சேர்க்கின்றார். ("நாங்களும் இது குறித்துப் பழக்கப்பட்டவர்கள்") இது முக்கியமாகின்றது, ஏனென்றால் குறிப்பிட்ட ஒரு வகையான நடுவர் தீர்வு முறையினைத் தெரிந்தெடுத்தல் தொடர்பாக அவர்கள் முக்கியமான விமர்சன நோக்கிலான அம்சங்களை இனங்கண்டு கொள்கின்றார்; அத்துடன் அவரும் சமூகத்தின் ஒரு பகுதி என்பது வெளிவருவதுடன் இம்முறைமையினைத் தெரிந்தெடுத்தலிலும் அவர் சேருகின்றார் என்பதும் அறியப்படுகின்றது. இது, சமூகத்தைக் குறித்து இதுதான் சிறந்த வாய்ப்பு என நினைக்கும் ஒருவருடைய பெறுமதி வாய்ந்த விமர்சன நோக்கிலான கருத்தாகின்றது. இவ்வாய்வின் தேவைகளைக் குறித்து, ஒரு சமூகத்தைத் தழுவிய மிகச் சிறந்த தெரிந்தெடுக்கப்படக் கூடிய வாய்ப்பு எனக் கருதும் ஒருவரிடமிருந்து கிடைக்கின்ற விமர்சன நோக்கிலான பார்வை என்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வாய்வு தொடர்பாக, ஒரே முகமான சமூகத்தைத் தழுவிய முறைமையினை ஆதரித்து முன்வைக்கும் அதேவேளை அதனைச் சரியீடு செய்யும் விமர்சன நோக்கிலான பங்களிப்பினையும் செய்கின்ற அணுகுமுறையாகின்றது.

இப்பிரிவிலுள்ள மற்றைய மக்களிடமிருந்து கிடைக்கும் சான்றுகள், வேறு சமூகங்களிலிருந்து வருகின்ற மற்ற உறுப்பினர்களுக்கு ஒத்தவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளன. KRI சமூகத்திலிருந்து வருகின்ற பதிலளிப்பாளர் பாதிரியார்களைப் பற்றியும் அவர்கள் நடுவர் தீர்வு முயற்சிகளில் ஈடுபடுவதைப் பற்றியும் கூறியுள்ளார். NNT சமூகத்திலுள்ள பதிலளிப்பாளர், பாதிரிமார்கள், கிராம சேவகர் ஆகியோரின் பங்களிப்புப் பற்றியும் கூறியுள்ளார்.

> "*நீதி எல்லோருக்கும் நாட்டில் சமனுடையதாக இருத்தல் வேண்டும். இனத்துவம், சாதி அல்லது மதம் ஆகியவை இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்துவது உகந்ததல்ல. நாங்கள் பாதிரிமார்களிடம் நீதி பெறுவதற்காகச் செல்கின்றோம். அவர்கள் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்றனர்.*"
> (KRI ஆ 55)

> "*நாங்கள் நீதி தொடர்பாக கதைப்பதற்குப் பாரதூரமான பிரச்சினைகளை எதிர் நோக்கவில்லை. ஏதாவது பிரச்சினைகள் எழுந்தால் கிராம சேவகர் தீர்த்து வைக்கின்றார். பாதிரிமார்களும் இவை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.*"
> (NNT பெ 44)

## முதற்கட்ட முடிவுகள்

இவ்வாய்விலிருந்து தெரியவருவது, மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் நீதி கிடைத்தல் என்பது சமூக-பொருளாதார நிலையுடன் தொடர்புபட்டதாகப் பார்க்க முடிகின்றது. அவ்வாறாக இருப்பினும் உண்மையில் அவர்கள் நீதி மற்றும் நடுவர் தீர்வு ஆகியவற்றைத் தம்முடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தேடிச் செல்வதில் சமூக-பொருளாதார நிலையினால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. எந்த நீதி முறைமைகள் தெரிவு செய்யப்படுகின்றன என்பது, சமூகங்களின் கூட்டான அனுபவங்கள், அடையாளம் மற்றும் சமூகத்தவர்களுக்குத் தெரிந்த அவர்களினால் மதிக்கப்படுகின்ற கட்டமைப்புக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டவையென்பது கவனத்திற்குரியது.

செல்வம், வலையமைப்புகள் மற்றும் சமூக-பொருளாதார நிலை, நீதி கிடைத்தல், மற்றும் முறைசார் நீதி முறைகள் குறித்த பெறுவழி ஆகியவை சமூகங்களில் எவ்வாறு செல்வாக்குகளை வகிக்கின்றன என்பது தொடர்பான பதில்கள் கிடைத்துள்ளன. அவை பெருமளவுக்கு எடுத்துக் காட்டும் உணர்வு நிலை என்னவென்றால், செல்வம் படைத்த, நன்கு தொடர்புகள் வைத்திருக்கும் ஒருவர் நீதிமன்ற முறைக்குச் செல்ல முடிகின்றது; மற்றும் காவல்துறையினருக்கு முறையீடு செய்தலும் சாத்தியமாகின்றது.

எப்படியாயினும் இக்கருத்து நிலவியுள்ள பொழுதிலும், பதிலளிப்பாளர்கள் ஒருவரும், நல்ல நிலையில் இருப்பவர்கள் உள்ளடங்கலாக, முறைசார் நீதி முறைமைக்குச் செல்ல விரும்பியதாகத் தெரியவில்லை. அவர்கள் சொந்தமான தங்களுடைய சமூகம் சார்பான தீர்வு முறைகளைத் தொடர்வதில் திருப்தியடைந்துள்ளனர்.
மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களைப் பொறுத்தவரை, மோதலில் முக்கிய பங்கினை வகிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான முறைசார் நீதி அமைப்பினைப் பயன்படுத்துவது மிகச் சிறந்த வாய்ப்பாகக் கருதப்படவில்லை.

நேர்காணல்களிலிருந்து பிரித்தெடுத்து மேற்கோளாக எடுத்துக் காட்டிய பகுதிகள் கூறுவது, மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் நீதி கிடைத்தல் கட்டாயமாக ஒரு முறைசார்ந்த சட்டச் செயன்முறை என்பதனூடாகக் கிடைப்பதாகக் கருதவில்லை. தங்களுடைய விடயங்கள் ஒரு தொடர்ச்சியுடைய பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் விதத்தில் அவற்றுக்குச் சமூகம் சார்பான நிறுவனங்கள் மூலம் தீர்வு காண முடிகின்றது.

## 7. பின்னணியமைப்பின் மீள்பார்வை

### நீதி பற்றிய வரைவிலக்கணங்கள்

இவ்வாய்வினில் நீதி குறித்துப் பயன்படுத்தப்பட்ட வரைவிலக்கணம், நீதி ஒரு தொடர்ச்சியான செயன்முறை எனவும் மற்றும் ஒவ்வொரு சமூகங்களிலிருந்தும் கிடைக்கப் பெற்ற தகவல் காட்டுவது, இச்செயன்முறை எவ்வளவு தூரம் சமூகங்களினால் அனுபவிக்கப்பட்ட அநீதி தொடர்பான தீர்வு குறித்துச் சென்றுள்ளது என்பதையும் காட்டுகின்றது. நீதி நேர்மையானது/நடுநிலைமையானது என்பதும் சமூகங்கள் அதனுடன் வாழ்வது அவற்றின் அனுபவங்கள் பற்றிய நேர்மையற்ற தன்மைகளின் எண்ணங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையவையாக உள்ளன; அத்துடன் அது முறைசார் சட்டமுறைகள் மூலமான நீதி என்பதிலிருந்து அதிகம் விலகி நிற்கின்றது. உதாரணமாக, ஆய்வில் கண்டு கொண்டதில், சில பதிலளிப்பாளர்கள் தங்களுடைய மோதல் சார்பான அனுபவங்கள் தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றச்செயல்கள் எனக் கருதிய பொழுதிலும், அவற்றை விட்டு மேல் சென்றுள்ளனர்; மற்றும் தற்பொழுது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மட்டும் தீர்வுக்கான முயன்றுள்ளனர்.

இவற்றினை, சமூகங்கள் எதிர்நோக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் கட்டமைப்புச் சார்ந்த தடைகள் என்பவற்றின் சூழமைவில் வைத்து நோக்கப்படுதல் வேண்டும். இவை மக்கள் நாடுகின்ற நீதியின் வகை பற்றிச் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன. இந்த ஆய்வில், சமூக-பொருளாதார நிலை, எவ்வாறு மற்றும் எப்பொழுது சமூகங்கள் நீதி பெறுதலை நாடுகின்றன என்பதன் மீது முக்கிய காரணியாகச் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்ற கருதுகோளினைச் சரி பார்த்தல் பிரதான நோக்கமாக அமைகின்றது. எப்படியாயினும் இக் கருதுகோளானது, ஆய்வு மூலம் தெரிய வந்த ஆய்வுக்காக எடுக்கப்பட்ட சமூகங்களின் அடிப்படையான நிலைமைகளின் சிக்கல்கள் நிறைந்த யதார்த்தத்தினைச் சரியாகப் பிரதிபலிக்கவில்லை என்பதை அறிய முடிகின்றது. ஆய்வு எடுத்துக் காட்டியது, வேறுபட்ட சமூக-பொருளாதார நிலைகளைக் கொண்ட தோற்றத்துடன் இல்லத்தினர்/குடும்பங்கள் ஒவ்வொரு சமூகத்திலும் வாழ்கின்றனர். இதனால், மூன்று பிரிவினராக மட்டும் பாகுபடுத்தல் கூடுதலான ஒரு செயற்கையான பாகுபாடாகத் தெரிகின்றது. இப்பின்னணியில், இவ்வாய்விலிருந்து முன் வைக்கக் கூடியது என்னவென்றால், வீச்சமைவுடைய சமூக-பொருளாதார வேறுபட்ட வகைகள், மற்றும் மோதலின் பாதிப்புத்தன்மை ஆகியவை நிலவியுள்ள நிலையில், சமூகங்கள் தங்களுடைய மோதலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை, பரந்த வகையான மீட்பு செய்முறையின் பின்புலத்தில், அணுகுவதில் தங்களுடைய சொந்தமான நம்பத்தகுந்த வழிமுறைகளை பயன்படுத்த விரும்புவதாகத் தெரிகின்றது.

மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் சமூக-பொருளாதார நிலையினை ஒரு செல்வாக்குப் பொருந்திய காரணியாகக் கருதலாம். ஆனால், நடைமுறையில் வேறு காரணிகளான, சமூகத்துடன் கொண்டிருக்கும் தொடர்புகள், நம்பகத்தன்மை, ஏற்புடைமை, ஒழுக்கவியல் சார்ந்த மற்றும் சமூகம் சார்பான எண்ணப்பாங்குகள் பலமூட்டப்படுதல் என்பவற்றுடன் மற்றும் மரபுரீதியான நடைமுறைகள் ஆகியவற்றையும் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வு தேடல் குறித்த பொறிமுறைகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றைத் தெரிவு செய்வதில் கூடுதலான பங்களிப்பினை ஆற்றியுள்ளன.

உயர்வான சமூக-பொருளாதார நிலையில் இருப்பவர்களும், சமூகத்தைத் தழுவிய நடுவர் தீர்வு முறைகளைத் தெரிவு செய்வதனை விரும்பியுள்ளதும் கவனிக்கத்தக்கது. சமூக-பொருளாதார நிலை, சமூகங்கள் மோதலை அனுபவித்ததில் ஒரு முக்கியமான காரணியாக இருக்கவில்லை; மக்களுடைய அனுபவங்கள் கணிசமான அளவுக்கு ஒத்த தன்மையுடையவையாக இருந்தன மற்றும் ஒவ்வொருவரும் ஆட்களையும், சொத்தையும் இழந்துள்ளனர். ஆகவே, ஆய்விலிருந்து முடிவாகக் கூறப்படுவது, சமூக-பொருளாதார நிலையென்பது மக்களின் ஆரம்பகால அநீதிகள் அல்லது பின்னரான நீதி தொடர்பான தேடுதல் ஆகியவற்றில் பெருமளவாகத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

### சமாதானம் பற்றிய வரைவிலக்கணங்கள்

இவ்வாய்வு, எதிர்மறையான சமாதானத்திலிருந்து ஆக்கபூர்வமான சமாதான நிலைக்கு மாறுதல் என்ற கருத்திற்குச் சவால் விடுகின்றது. அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்தம், ஒரு ஆக்க□ர்வமான சமாதானமாகக் கருத முடியாது; மற்றும் பேரின மட்டத்தில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. அத்துடன் கூடுதலான சமவாய்ப்பினையுடைய சமூக உறவுகள் என்பவற்றை நோக்கிய நகர்வும் ஏற்படவில்லை, மற்றும் மோதலுக்கு வழிவகுத்த விடயங்கள் ஒன்றும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. பதட்டநிலை அதிகரிக்குமிடத்தில் அரசியல் நிலைப்பாடு எடுக்கப்படுதல் தொடர்ந்து செல்கின்றது; மற்றும் வன்முறை அடுத்தடுத்து அச்சுறுத்தலை விளைவித்து அரசியல் இலாபம் தேடப்படுகின்றது. எப்படியாயினும், ஆய்வுக்கு உதவிய பாதிக்கப்பட்ட சமூகங்கள் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்திருக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றனர். அவர்களுடைய எதிர்கால அபிலாஷைகள், தொடர்ந்து செல்லும் நம்பிக்கை மற்றும் அது காலப்போக்கில் உறுதியானதாக மாறுவது என்பவற்றில் தங்கியுள்ளது.

> *“நான் என்னுடைய கல்வியை முடித்துக் கொண்டு வேலை ஒன்றைப் பெறல் வேண்டும். என்னுடைய தாய், சகோதரன் மற்றும் சகோதரி ஆகியோரைப் பார்க்க வேண்டியது எனது பொறுப்பு. நாங்கள் எங்களுடைய சொந்த வீட்டைக் கட்டுதல் வேண்டும். எனது முதலாளியிடமிருந்து நான் பெற்ற கடனை அம்மா இப்பொழுதும் அடைத்துக் கொண்டிருக்கின்றார். அரச படையினர் எங்களுடைய இடங்களைப் பிடித்தனர். நாங்கள் அங்கே திரும்பிச் செல்ல விரும்புகின்றோம். இன்றுள்ள சமாதான நிலைமை தொடருமானால் அதைப் பற்றிச் சிந்திக்கலாம்.”*
> (KRI பெ 17)

> *“நாங்கள் எதனையும் எவரிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை. சமாதானம் நிலவுமானால் எங்களுடைய அலுவல்களைக் கவனிக்கலாம்; எங்களுடைய பிள்ளைகள் தங்களுடைய கல்வியினைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம், வேலை செய்வது பற்றிய முயற்சியில் ஈடுபடலாம். நாங்கள் ஒருவருக்கும் தீங்கிழைக்காமல் வாழ விரும்புகின்றோம். தற்போதுள்ள சமாதானம் தொடருமானால் நாங்கள் நம்பிக்கையுடன் வாழலாம்.”*
> (KRI பெ 51)

> *“எங்களது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றனர். எங்களுடைய காலத்தில் இல்லாத அளவுக்கு இப்பொழுது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது அதிக செலவினை உண்டுபண்ணுகின்றது. அவர்களுக்கு நல்ல கல்வி வசதியினை அமைத்துக் கொடுத்தால், அவர்கள் நல்ல வேலை வாய்ப்புக்களைப் பெறலாம். இதற்குப் பணம் தேவைப்படுகின்றது. நாங்கள் நல்ல வீட்டினைக் கட்ட விரும்புகின்றோம். தற்போதுள்ள சமாதானம் நீடித்திருக்குமா என்பது பற்றிச் சொல்ல முடியாது. அவ்வாறு இருக்குமானால் அது மிகவும் நல்லதாகும்.”*
> (MSL பெ 26)

> *“நாங்கள் சமாதானமாக வாழ விரும்புகின்றோம். சமாதானம் தொடருமானால் எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்க மாட்டாது.”*
> (NNT ஆ 54)

மோதலினால் பாதிக்கப்பட்ட எல்லாச் சமூகங்களும் தற்போதுள்ள நிலைமையினை ஒரு சமாதானக் காலமாக கருதுவதுடன், அச்சமாதானம் அவர்களின் தற்போதுள்ள தேவைகளுக்குப் போதுமானது என எண்ணுகின்றனர். எதிர்காலத்தைப் பற்றிய அவர்களின் நம்பிக்கை இன்று நிலவுகின்ற வலுவற்ற சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றது. எதிர்காலம் பற்றி அவர்களால் வெளிப்படையாகக் கூறப்பட்ட அபிலாஷைகள், ஒரு சமூக-பொருளாதாரப்பரிமாணத்தைக் கொண்டிருந்தன. ஆனாலும், அவையெல்லாம் தொடர்ந்திருக்கும் சமாதானம் என்பதைத் தழுவி அமைகின்றன.

இதிலிருந்து அறியக்கூடியது என்னவென்றால், சமூகங்களைக் குறித்து எதிர்மறையான சமாதானம் போதியளவுக்கு ‘ஆக்கபூர்வமான’ தன்மையுடையதாக இருப்பது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப உதவுகின்றது; மற்றும் பரந்த விதத்திலான அரசியல் விடயங்கள், இங்குள்ள சமூகங்களைவிட, வெளியேயுள்ள சாராருக்கு கூடுதலாகப் பொருந்துவதாக உள்ளது.

### மனித பாதுகாப்பு

இந்த ஆய்வில் மனித பாதுகாப்பு என்ற எண்ணக்கரு குறித்தும் மோதலுக்குப் பின்னான சூழ்நிலைகளில் அதனுடைய பயன்பாடு பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டம் மோதலினால் பெரிதும் பாதிக்கப்பட்டது, “தொடர்ந்த அச்சுறுத்தல்கள்” மற்றும் “நாளாந்த வாழ்க்கையில் திடீரெனத் துயரம் தருகின்ற குழப்பங்கள்” என்பவை குறித்துப் பலவீனமான நிலை எதிர்நோக்கப்பட்டுள்ள பொழுதிலும், அதிகளவுக்கு மக்கள் பாதுகாப்பற்றவர்களாக இருந்தனர். மனித பாதுகாப்பு என்ற எண்ணக்கரு போரினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து ஏன் மிகக் குறைந்த கவனம் செலுத்தப்பட்டது என்பதை விளக்க முடியுமா? இதிலிருந்து மேலும் எழுகின்ற கேள்வி, செயற்பாட்டு நிறுவனங்களும் மற்றும் உள்ளூர் அரசாங்கங்களும் இவ்வெண்ணக்கரு பற்றி நன்கு அறிந்திருந்தால் மோதலுக்குப் பின்னான அபிவிருத்தியும் ஆய்வுக்குட்படுத்திய சமூகங்களின் மீட்பு அனுபவங்களும் வேறானவையாக இருந்திருக்குமா? அத்தகைய ஒரு பரந்த, எல்லாவற்றையும் உள்ளடக்கும் இவ்வெண்ணக்கரு மூலம் சூழ்நிலைக்கு இனிமேலும் பொருந்தாத மற்றும் காலத்துக்கு ஒவ்வாத சமூகப் பெறுமானங்கள் மற்றும் சமூக-பொருளாதார அந்தஸ்த்து என்பவை தொடர்பாக இன்னொரு வெறும் சரிபார்க்கும் பட்டியலை வழங்கும் ஆபத்து எழுகின்றது.

மோதலுக்குப் பின்னான நிலைமைகளில், மனித பாதுகாப்பு பொருத்தப்பாடுடையதாக இருப்பதற்கு அது கடுமையான கட்டத்தில் சமூகங்களைக் கூடுதலாகப் பாதிக்கும் நிகழ்வுகள், சம்பவங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து பிரயோகப்படுத்தியிருத்தல் வேண்டும். இவ்வெண்ணக்கரு உள்ளூர் மட்டத்தில் அர்த்தமுடையதாக இருப்பதனால், சமூகங்கள் மிகப் பாதுகாப்பற்ற நிலையில், அது நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கான அடிப்படையினை வழங்கியிருத்தல் வேண்டும்; அதற்குப் பதிலாக மக்கள் தங்களுடைய சொந்தமாக பாதுகாப்பினை நிறுவிய பின்னர் அவற்றை ஆராய்கின்ற முறையாக இருத்தல் பொருத்தமற்றது. மன்னார் மாவட்டமும் இவ்வாய்வுக்குப் பங்களிப்புச் செய்த மூன்று சமூகங்களும் நிலைமாற்றக் கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகக் கருத முடிகின்றது. சமாதானத்தை நோக்கிய உண்மையான நிலைமாற்றத்திற்குச் செல்வதற்கு வேண்டிய அரசியல் உறுதிப்பாடு இன்னும் நிறுவப்படவில்லை; ஆனாலும் சமூகங்கள் பாரதூரமான மோதல் பாதிப்பு நிலையிலிருந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய, நிலைத்துச் செல்லக்கூடிய நீண்ட சமாதானப் பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளன. சமூகங்கள் தங்களுடைய சொந்த பிணக்குகளின் தீர்வு மற்றும் நடுவர் முயற்சி ஆகியவை குறித்து முன்வைத்த தீர்வுகள் மற்றும் ஜனநாயகம் இச்சமூகங்களிடையே செயலூக்க முடைய முறையில் தொழிற்படுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தொம்சன்-சேனநாயக்க ஆகியோர் இது பற்றிக் கூறுவது:

> "*நிலைமாறுதலான சமாதானச் சூழமைவில் மனித பாதுகாப்புக் குறித்த எல்லா அம்சங்களின் மீட்டளிப்பு, இணக்கப்பாடு காண்பதற்கும் மற்றும் உயிர்ப்புடைய ஜனநாயக சமூகத்தை நிறுவுவதற்கும் மிகவும் தேவையானவை. மிகவும் உக்கிரமான உள்நாட்டு மோதல் அல்லது அடக்குமுறைக் காலம் என்பவற்றிலிருந்து வெளியேறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அரசியல், தனியான மற்றும் சமூக ரீதியான பாதுகாப்பு ஆகிய மனித பாதுகாப்புப் பற்றிய பல்வேறு அம்சங்கள் கூடுதலான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இச்சமயத்திலும், ஒருவருடைய இடத்தின் மீட்டளிப்பில், பொருளாதார, உணவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவை நாளாந்த மனித தேவைகள் உறுதிப்படுத்திய விதத்தில் உள்ளடக்கப்படுகின்றன.*"
> (Thomson-Senanayake, 2002, pg. 10)

இதில் கூறப்பட்டுள்ள எண்ணங்கள், கருத்துக்கள் ஆகியவற்றுக்கான பின்னணியினை இவ்வாய்வு வழங்குவதற்கு உதவுகின்றது. நிலைமாறும் சூழ்நிலையில் நீதியென்பது குறித்து மனித பாதுகாப்பின் எல்லா அம்சங்களும் மீட்டளிப்புச் செய்தல் தேவையானது என்ற நிலைப்பாட்டுக்கு இவ்வாய்வு ஆதரவு வழங்குகின்றது. ஆனாலும், ஆய்வு முக்கியமாக எடுத்துக்காட்டுவது என்னவென்றால், நிலை மாற்றமுடைய நீதியும் மீட்பு முயற்சியும் மோதல் அனுபவத்திற்குப் பின்னராக உடனடியாக ஆரம்பிக்கின்றன. சமூகங்கள் மோதல் தொடர்பாக ஒரு ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு வரும்வரை, நிலைமாற்றத்தினைத் தொடங்குவதற்குக் காத்திருப்பதில்லை. நிலைமாற்ற நீதி என்ற சொற்றொடர், போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்திலிருந்து சமாதானம் சாத்தியமாகும் என்ற நிலைக்குச் செல்லுதலைக் குறிக்கின்றது. ஆனால் ஆய்விலிருந்து கூறப்படுவது, நிலை மாற்றத்திற்கு முன்னான கட்டமும் முக்கியமாகின்றது எனக் கருத முடிகின்றது. நிலை மாற்றத்திற்குத் தேவையாக இருப்பது ஓரளவு அரசியல் உறுதித்தன்மை; என்றாலும் நிலை மாற்றக் கட்டத்திற்கு முன்னர் அதிகளவுக்கு மீட்பு முயற்சி, அரசியல் உறுதிப்பாடு நிறுவப்படுவதற்கு முன்னாகவே ஏற்படுகின்றது. இங்கு முக்கிய குறிப்புக்களுடன் விபரிக்கப்பட்ட மூன்று சமூகங்களும், உலகத்தில் அவற்றின் இடத்தைத் தேடிச் செல்லும் மீட்டளிப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன; அவற்றினூடாக சமூகத்தினர் தங்களுடைய பொருளாதார வசதிகள், உணவு, சுகாதாரம், ஜீவனோபாயத் தொழில் வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் ஆகியவற்றை, வலுவற்ற போர் நிறுத்த நிலைமையிலும், கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தொம்சனும் சேனநாயக்காவும், ஒரு வேறுபட்ட கருத்தினைப் பிரதிபலித்துள்ளனர்; இது, மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், முன்னுக்குச் செல்வதற்கு, அவற்றின் சென்றகால நிலைமைகளுடன் இணக்கப்பாடாகுதல் வேண்டப்படுகின்றது என்று பரவலாக வெளிப்படுத்தப்பட்ட எடுகோளினைத் தழுவி அமைகின்றது.

> "*இணக்கப்பாடு ஏற்படுதல் நிலைமாறும் நீதியில் ஒரு பொழுதாக உள்ளடங்குகின்றது; இதில் சென்றகால அக்கறைகளும் மற்றும் அவ்வாறான அக்கறைகள் அங்கீகாரம் பெறுவதும், எதிர்காலம் பற்றிய அக்கறைகள் மற்றும் அபிலாஷைகள் ஆகியவற்றுடன் அவை பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்படுகின்றன என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.*"
> (Thomson-Senanayake, 2002 pg. 11)

இனக்கப்பாடு பற்றிய இக்கருத்தானது, ஆய்வில் தெரியப்படுத்திய விடயங்களுடன் ஒத்துச் செல்வதாக இல்லை; ஆய்வில் எவ்வளவுக்கு நிலை மாற்றத்திற்கு முன்னான கட்டம் முக்கியமானது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏனென்றால், ஆய்வில் ஈடுபட்டுள்ள சமூகங்களின் மக்கள் குறித்து, சென்றகால அக்கறைகள் என்பவை எதிர்கால அக்கறைகளுடன் இணைந்தவையாக இல்லை. அவ்வாறு அவை பற்றி ஏற்றுக் கொள்ளுதலும் மிகக் குறைந்த அளவில் உள்ளது; மற்றும் மக்கள் தங்களுடைய சென்றகால நிலைமையிலிருந்து எதிர்காலத்தை நோக்கிச் செல்கின்றனர். தொம்சன்-சேனநாயக்க அவர்கள் குறிப்பிடுகின்ற இணக்கப்பாடு குறித்த 'பொழுது' என்பது, சென்றகால சம்பவங்கள் தொடர்பான ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஒப்புக்கொள்ளுதல் ஆகியவை இல்லாமலே ஏற்கனவே அடையப்பட்டிருப்பதாக இருக்கலாம்.

இவ்வாய்வின் உரையாடலில் வலியுறுத்தப்பட்ட விடயம் எதுவென்றால், மோதலுக்குப் பின்னான நிலைமைகள் குறித்துப் பிரயோகப்படுத்தியுள்ள எண்ணக்கருக்கள், ஆய்வில் பங்களித்த சமூகங்களைப் பொறுத்து அதிகம் பயனுடையவையாக அல்லது பொருத்தப்பாடுடையவையாக இல்லை. மோதலின் சூழமைவுக்கு வெளியே இருந்து வருகின்ற வல்லுநர்களினால் இவ்வெண்ணக் கருக்கள் பயன்படுத்தப்படலாம். அவர்கள் அவ்வாறு பயன்படுத்திச் சமூகங்களின் அனுபவங்களை ஆராய்ந்து, அவற்றைப் பாகுபடுத்தி மற்றும் நிறுவனங்களின் தோல்வி பற்றி எடுத்துரைத்து மற்றும் முக்கிய எதிர்காலத்துக்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு உதவலாம். ஆனாலும் அவை தளத்தின் யதார்த்த நிலை பற்றிச் சரியாகப் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை. இவ்வாய்வு, மனித பாதுகாப்பு, சமாதானம், இணக்கப்பாடு என்பவை பற்றிய எண்ணக்கருக்கள் தொடர்பாக

மிகவும் தேவைப்படும் விமர்சன நோக்கிலான விளக்கத்தினை வழங்குகின்றது. இதனுடைய சில பிரதான பரிந்துரைகள், இத்துறை குறித்த எதிர்கால ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடியவையாக உள்ளன.

## 8. கருத்தாடலை மேலும் முன்னெடுத்துச் செல்லுதல்

### சமூகங்கள் அவற்றின் பிணக்குகளின் தீர்வில் பயன்படும் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தல்

சமூகங்களில் மக்களுக்குக் கிடைக்கும் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்புகள் என்பவற்றை நோக்குமிடத்து, அவை மக்கள் தாங்கள் உள்ளூரில் பயன்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றை மதிக்கின்றனர் என்பது தெரிகின்றது. அத்தகைய நிறுவனங்கள் சமூகங்களிடையே அதிகளவுக்கு நியாயத்தன்மையும், ஏற்புடைமையும் கொண்டவையாக உள்ளன. பள்ளிவாசல் குழுக்கள், கிராமிய அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் தேவாலய குழுக்கள் ஆகியவை மத்திய அரசாங்கம், உள்ளூர் அரசாங்கம் மற்றும் வெளிநாட்டு, அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து தேவையான ஆதரவைப் பெறுதல் வேண்டும். இவை வெவ்வேறு விதத்தில் சாத்தியப்படலாம். உள்ளூர் குழுக்கள் மற்றும் உள்ளூர் அரசாங்க காரியாலயங்களுக்கிடையே இணைப்புகளை விருத்தி செய்தல்; சமூக மக்கள் கூடும் இடங்கள் தொடர்பான உட்கட்டுமான வசதிகள் போன்றவற்றை அதிகரித்தல், தேவையேற்படின் பிணக்குகள் தீர்க்கும் நுண்முறைகள் மற்றும் சமரசஞ் செய்யும் திறன்கள் தொடர்பான தகவல், பயிற்சி என்பவற்றை வழங்குதல் போன்ற பல்வேறு வழிகளில் குறிப்பிட்ட ஆதரவு வழங்கப்படலாம். மேலும், இத்தகைய நிறுவனங்கள் மற்றும் ஒத்த விதமான கருத்துக்கள், வேலை முறைகள் கொண்ட மற்றைய நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையே இணைப்புக்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம். இப்பல்வேறு குழுக்களினால் பெறப்படும் அறிவும், திறன்களும் அவை போன்ற குழுக்களுக்கும் மற்றும் சமூக அமைப்புக்களிற்கும் மாற்றப்படுவது முக்கியத்துவம் கொண்ட விடயமாகின்றது. இந்த நிறுவனங்களை நோக்கி மட்டும் தகவல்களின் ஓட்டம் ஏற்படுவது போதுமானதல்ல; அவை நிறுவனங்கள் ஏனையவற்றிலிருந்து வெளிப்படுவதும் நிறுவனங்களுக்கிடையே இருந்து கிடைப்பதாக அமைவதும் தேவைப்படுகின்றது. ஏனென்றால், குறிப்பிட்ட சமூகங்களின் அனுபவங்களிலிருந்து கிடைப்பவற்றினால் அதிக அறிவினையும் தகவலையும் பெறமுடிகின்றது.

### மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கூடுதலான முறைசார் அபிவிருத்திச் செய்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

எங்களுடைய ஆய்விலிருந்து தெரியவருகின்ற இன்னொரு விடயம், மோதலுக்குப் பின்னான உட்கட்டுமான வசதிகள் மற்றும் ஜீவனோபாய விருத்தி ஆகியவை பாதிக்கப்பட்ட இடங்களில் ஏற்படாதது ஒரு பெரும் அக்கறையினை உண்டு பண்ணியுள்ளது. ஆய்வில் பங்கெடுத்த ஒவ்வொரு சமூகத்தினரும், ஜீவனோபாயத் தொழில்களுக்கு ஆதரவான செய்திட்டங்கள், சிறு கடன் திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான விருத்தி பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றிலிருந்து நன்மை பெறமுடியும். MSL சமூகத்தினரால், உதாரணமாக, நீர்ப்பாசனம், வீடமைப்பு, தண்ணீர், சூழமைவுச் சுகாதாரம் மற்றும் தொடர்பு வசதிகள் ஆகியவற்றுக்கு உதவி கிடைக்க வேண்டிய விசேட துறைகளாகக் கூறப்பட்டுள்ளன. இத்தகைய பிந்திய கட்டத்திலாவது மனித பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதனால், இச்சமூகங்கள் ஆதரவளிக்கப்பட்டு, வெளிவாரியான அதிர்வு நிலை மற்றும் அபிவிருத்திச் சவால்கள் என்பவை குறித்து அவற்றின் பலவீனத்தன்மை குறைக்கப்படுதல் வேண்டும்.

### மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் அனுபவங்களையும் அவற்றிலிருந்து படிப்பினைகளையும் பகிர்ந்து கொள்ளுதல்

இந்த ஆய்வு, குறிப்பிட்ட சமூகங்களிடையே அவை அறிந்தவை குறித்து ஒரு சிறு பகுதியினை மட்டும் பெற்றுள்ளது. இச்சமூகத்தினர் எந்தளவுக்கு நின்று பிடித்தனர், அவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பாக அவர்கள் கொண்ட உறுதி மற்றும் சமாதானம் பற்றி அவர்களிடத்தே காணப்படும் அழியாத நம்பிக்கை ஆகியவை பல படிப்பினைகளைத் தருகின்றன; இவை மோதலினால் பாதிக்கப்பட்ட மற்றைய சமூகங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையத் தகுதி வாய்ந்தவை. இவ்வாய்விலிருந்து அறிந்துள்ள படிப்பினைகளைக் கற்றுணர்தல் மற்றும் இச் சமூகத்தினருடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவை பெறுமதி கொண்டவையெனக் காணப்படுகின்றன. இவை தொடர்பாக மேலும் செய்ய வேண்டியவை அதிகம் உண்டு.

## 9. மோதலுக்குப் பின்னான நீதி பற்றிய எண்ணக்கருவின் மீள்பார்வை

மேலே தரப்பட்ட முடிவுகள் தொடர்பாக, மோதலுக்குப் பின்னான மீட்பு முயற்சியில் நீதிக்கு வழங்கப்பட்ட இடம் குறித்து கிறிட்ஸ் (Kritz) அவர்களின் கருத்துக்களை மீண்டும் நோக்குவது பொருத்தமானது.

> "*சமூகங்களுக்கு எதிராக அட்டூழியங்கள் புரியப்பட்டதனால் அவை சிதைவுற்ற நிலையினை அடைந்தன. அத்தகைய நிலையிலிருந்து அச்சமூகங்கள் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளுதல் தேவைப்படுகின்றது; அல்லது தங்களுக்கெதிரான அட்டூழியங்களை எதிர்கொள்ளுதல், கடந்தகால துஷ்பிரயோகங்களைக் கணக்கெடுத்துக் கொள்ளுதல் என்பவை தொடர்பாக பொருத்தமான பொறிமுறைகளை வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். அல்லாவிட்டால் தேசங்கள் மற்றும் தனியானவர்கள் குறித்து சென்றகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை எதிர்பாராத விதத்தில் நச்சுப்படுத்த முடிகின்றது. கடுமையான அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட தனியார் அல்லது சமூகப் பிரிவினர் இலகுவாக அவற்றை மறந்து, அல்லது தம்முடைய உணர்வுகளைத் துடைத்தொழித்து விடுவார்கள் என்று எண்ணுவது பொருத்தமற்றது. ஏதோ ஒருவகையான பொறுப்புக் கூறுதல், நீதி குறித்த ஓரளவு தோற்றப்பாடு என்பவை இல்லாமல் அவற்றை மறத்தல் அல்லது மனதிலிருந்து அகற்றுதல் சாத்தியமாகும் என்று எண்ணுவது, மேலும் ஆழமான வெறுப்புணர்வை வளர்ப்பதற்கும் மற்றும் எதிர்கால மோதலுக்கு வித்துக்களை இடுவதற்கும் வழிவகுக்க முடிகின்றது.*"
> (Kritz, 1997 pg. 2)

இவ்வாய்வில் பங்கெடுத்த சமூகத்தினர் மோதலினால் சிதைவுற்றனர். இப்பின்னணியில் அவர்கள் நிலைமைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைத்துதக் கொண்டனர்; அத்துடன், தங்களுடைய சென்றகால அட்டூழியத்தின் அனுபவங்களுக்கு முகங்கொடுப்பதற்கு வேண்டிய வழிமுறைகளையும் வகுத்துக் கொண்டனர். இவ்வழி முறைகள் சமூகங்களிலிருந்து வளர்ந்தன மற்றும் அவை தங்களுக்குத் தெரிந்த நம்பிக்கையுட்டுகின்ற நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மோதல்கள் தொடங்கி ஓரளவு காலம் முடிந்து விட்டது. சமூகங்களிடையே ஆழமாக மறைந்திருக்கும் வெறுப்புணர்வுகள் பற்றி வெளிக்கொணர முயற்சி எடுக்கப்படவில்லை. ஆனாலும் பதில்கள் எடுத்துக் காட்டுவது, சமூகத்தினர் தங்களுக்கெதிரான சில அட்டூழியப் "பேயுருவங்களை" எதிர் கொண்டுள்ளனர்; மேலும், எதிர்கால மோதல் தொடர்பான சாத்தியப்பாட்டுக்கான விதைகள் எஞ்சியிருப்பதாகத் தெரியவில்லை. சமூக ரீதியாக நோக்குமிடத்து, எவ்வாறு அவர்கள் இதனைச் சாதிக்க முடிந்தது என்பது பற்றி எண்ணுகின்ற பொழுது, சமூகத்தினர் தங்களுடைய சொந்தமான மீட்பு முறைகளைக் கையாண்டுள்ளனர்; எந்தெந்த நிறுவனங்கள் பங்களிப்புச் செய்வது, எந்த முறைகளைப் பின்பற்றுவது என்பவற்றை அவர்கள் நிர்ணயித்துக் கொண்டனர்.

இவ்வாய்வு, சமூகங்களை தம்முடைய சொந்தமான முறைமைகளுக்கு விட்டுவிடுவதே சிறந்தது எனச் சிபார்சு செய்யவில்லை. அதற்குப் பதில் நிலையாகக் கூறுவது, சமூகங்களுக்கு தங்களுக்கென்ற மீட்பு முயற்சிகளைக் கண்டு கொள்ளும் ஆற்றல் உண்டு; அதற்கு மற்றைய பங்காளர்கள் ஆதரவளித்து, அவற்றைக் கூடுதலாக மேம்படுத்துவது பொருத்தமானது. இத்தகைய பங்காளர்கள், ஜீவனோபாயத் தொழில் வசதிகள் மற்றும் உட்கட்டுமானத்தை மீளக்கட்டியெழுப்புதல் ஆகியவை தொடர்பாக முக்கியமான பங்களிப்பினைச் செய்யலாம். அப்பங்களிப்பினூடாக மொத்தமாக மோதலிலிருந்து மீட்புப் பெறுவதற்கு உதவ முடிகின்றது. இவ்வழியாக சமூகங்கள் தங்களுடைய சொந்த மீட்புச் செயன்முறைகளைத் தொடர்வதற்கு ஒரு முக்கியமான, உறுதியான அடித்தளம் அமைக்கப்படலாம்.

**Bibliography**

GALTUNG, J. 1996. Peace by Peaceful Means: Peace and Conflict, Development and civilization. London: Sage Publishers.

HAYNER, P. 2002. Unspeakable Truths; Facing the Challenge of Truth Commissions. New York: Routledge.

KRIESBERG. L. 2001. Changing forms of Coexistence. In: ABU-NIMER, M. ed. Reconciliation, Justice and Co-existence. Maryland Lexington Books. Pp 47-64.

KRITZ. N. 1997. War Crimes Tribunals and Truth Commissions, some thoughts on accountability mechanisms for mass violations of human rights. After the War is Over What Comes Next? Conference on Promoting Democracy, Human Rights and Reintegration in Post-Conflict Societies USAID Conference October 30-31 1997. Washington DC: USAID, pp 2-22.

THOMSON-SENANAYAKE, J. 2002. Between Hostility and Healing; Truth, Accountability and Reconciliation in the context of Armed Conflict, Options for Justice in Sri Lanka.
Sri Lanka: National Peace Council.

UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME, 1994. New Dimensions in Human Security – Human Development Report. New York: UNDP.